24 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம் ™

VLAMBARAM ™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca

Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



FREE

Real Estate

Classes start every week

Call:416.321.6969



நதி 24 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2014


# ஐ.நா போர்க்குற்ற விசாரணைக் குழுவும் இலங்கைப்பயணமும்

ஐ.நா மனித உரிமை சபையின் சர்வதேச விசாரணைக்குழு இலங்கையில் நடைபெற்ற போர்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை செல்வதற்கு தொடர்ந்தும் முயற்சி செய்து வருவதாகவும், இலங்கை அரசோ இதுவரை இந்த கோரிக்கைக்கு ஆதரவளித்தோ அல்லது இந்த சர்வதேச விசாரணைக்கு உடன்பட்டோ எதுவிதமான முடிவுகளையும் எடுக்காமல் இருந்து வருவதாகவும் செய்திகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.




ஐ.நா மனித உரிமை சபை இலங்கைக்கு பிரயாணம் செய்யாமலே இலங்கையில் நடைபெற்ற போர்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொண்டு தமது அறிக்கையை சமர்ப்பிக்கும் என ஐ.நா மனித உரிமை அதி உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை 'Thomson Reuters Foundation' இற்கு தெரிவித்தார் என ஓகஸ்ட் 11, 2014 இல் Reuters நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கையில் இலங்கை அரசின் இராணுவம் 26 வருடகால உள்நாட்டு கலவரத்தின் இறுதிப்போர் மே 2009 இல் நடைபெற்றபோது பல மனித உரிமை மீறல்களை செய்திருந்தது. ஐ.நா சபையின் 2011 இல் வெளிவந்த அறிக்கையின்படி 40,000 தமிழ் பொதுமக்கள் இலங்கை இராணுவத்தால் போர் முடிவடையும் தறுவாயில் கொல்லப்பட்டனர். இதை இலங்கை அரசு மறுத்திருந்தது.

இலங்கையில் 100,000 மக்கள் கொல்லப்பட்ட போர்க்காலப் பகுதியில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி இலங்கை அரசு ஒரு சுயாதீனமான விசாரணை நடத்தாதபடியால் ஒரு சர்வதேச விசாரணையை ஐ.நா மனித உரிமை நடத்த வேண்டும் என ஒரு பிரேரணையை ஐ.நா மனித உரிமை சபை மார்ச் 2014 இல் நிறைவேற்றியது. இப்பிரேரணையால் கோபமுற்ற இலங்கை அரசு அவ்வாறான ஒரு விசாரணைக்கு உடன்பட மாட்டோம் என்றும் இவ்விசாரணைக்கு வரும் ஐ.நா விசாரணையாளர்களுக்கு நுழைவு விசா வழங்க மாட்டோம் என்றும் கூறியது.

Thomson Reuters Foundation இன் கேள்விக்கு பதிலளித்த ஐ.நா மனித உரிமை சபை அதி உயர் ஆணையாளர், இலங்கைக்கு வெளியிலேயே போதிய அளவு தகவல்கள் இருக்கின்றன. தாங்கள் அவற்றை கேட்பதன் மூலமே தமது விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க முடியும் என்றார். இவ்வாறான அறிக்கையின் நம்பகத்தன்மை, உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களில் தான் தங்கியுள்ளதே தவிர இலங்கைக்கு பிரயாணம் செய்வதில் அல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளை மேலும் தெரிவிக்கையில், சிரியா மற்றும் வடகொரியாவின் மீதான விசாரணைகள் அந்நாடுகளுக்கு பயணத்தை மேற்கொள்ளாமலேயே ஐ.நா சபை மேற்கொண்டது. அவ் அறிக்கைகளை சிரியா மற்றும் வடகொரியா அரசுகளை தவிர மற்றை நாடுகள் எல்லாம் ஏற்றுக்கொண்டன. இதனால் தாங்கள் அவ்வாறே இலங்கைக்கு பிரயாணம் செய்யாமலேயே ஒரு விசாரணை அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்க முடியும் என்றார்.

இலங்கையில் நடைபெற்ற இந்த போர்க்கால குற்றங்களை விசாரிக்கும் இக்குழுவின் விசாரணைகள் யூலை 01, 2014 இல் ஆரம்பித்து விட்டன. அன்றில் இருந்தே இலங்கை அரசிற்கும் ஐ.நா சபைக்கும் இடையேயான உறவுகளில் பதற்றம் அதிகரித்துள்ளன. இச்சபையின் விசாரணைகளில் கலந்து சாட்சியம் அளிக்க வேண்டாம் என சில அரசு சார்பற்ற ஸ்தாபனங்கள் இலங்கை அரச அதிகாரிகளால் பயமுறுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் மகிந்த இராஜபக்சாவினுடைய அதிகாரிகள் தொடர்ந்தும் இவ்வாறான ஒரு சர்வதேச விசாரணை தேவை யில்லை எனவும் இலங்கை அரசே இப்படி ஒரு விசாரணையை நடத்தும் என்றும் கூறிவருகிறார்கள். கடந்த மாதம் இவ்வாறு ஒரு உள்நாட்டு விசாரணை நடத்த இலங்கை அரசால் மூன்று வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் போர்க் காலத்தில் காணாமல் போனோர் பற்றிய விசாரணையை ஆரம்பிக்க உள்ளனர்.

Reuters செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கையில், நவநீதம்பிள்ளை தென் ஆபிரிக்காவை சேர்ந்த தமிழர்.


தொடர்ச்சி 28ஆம் பக்கம்



Raj A. Rasaratnam

Cell: 416-726-8055

Bus: 416-321-6969

HomeLife/GTA Realty Inc.

LEXUS OF RICHMOND HILL

LEXUS

I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.

குமார் ஜெகசோதி

Kumar Jegasothy

Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker

Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd.,

Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

MORTGAGE

Best Rates wih Major Banks/Companies

Pasky Kanagasabapathy

Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098

Fax: 416-291 3601

pkanagasabapathy@orianafinancial.com

• Residential/Commercial needs

• Purchase/Refinancing/Renewal/Switch

• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans

• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident

Oriana Financial Group of Canada Ltd.

Company#10214



இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

Dr. Iru Vijayanathan,

BDS, FAGD, MFDS RCPS (Glasg)

DENTAL SURGEON

☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்

☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)

☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்

☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்

☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை

☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022



THE TRUSTED MORTGAGE SPECIALISTS

"I Work for you Not for the Bank"

BonaFide

Some Terms & Conditions May Apply

•I will arrange your 1st Mortgage with 5% down.

•Need a 2nd Mortgage??? "When banks says no We says yes" @ interest rate starting from 6.99%+.

Thayalan Goblakrishnan

(M12001612)

தயாளன் கோபாலகிருஷ்ணன்

Contact: 416.575.3211

E-Mail: thaya.gobal@gmail.com







Celebrating 25 Years

Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் '25வது ஆண்டு விளம்பரப் போட்டி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)
1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.


1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# சர்வதேச விசாரணைக் குழு வெளியிலிருந்து செயற்படுவது சாத்தியமானதா?


AABS DON VALLEY PEST CONTROL INC.
Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406
ABDV PEST CONTROL
The Name You Can Trust

Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.


**- விகிர்தன் -**

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும், மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தினால் அமைக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இந்த நிபுணர் குழுவை முற்று முழுதாக நிரா-கரித்துள்ள இலங்கை அரசாங்கம் அக்குழு இலங்கை வருதற்கான விசா அனுமதியையும் வழங்கப் போவதில்லை என பல தடவைகள் அறிவித்திருந்தன.

இந்நிலையில் இலங்கைக்கு வராமலேயே தங்கள் பணியினை மேற்கொள்ள முடியும் என நிபுணர் குழு தெரிவித்தது. இலங்கையில் மட்டுமல்லாது வேறு நாடுகளிலும் இது போன்ற சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்ட போதும், விசாரணைகள் நடைபெற்றன என நிபுணர்கள் குழுவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் பற்றிய ஒரு பயனுள்ள விசாரணையை இலங்கைக்கு செல்லாமலேயே ஐ.நா விசாரணைக் குழுவால் நடத்த முடியும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளையும் தெரிவித்துள்ளார். இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு யார் காரணம் என்று தெரிந்து கொள்வதற்கு இந்த விசாரணை மிகவும் அவசியம் என்று அவர் தெரிவித்துள்ளதுடன், இலங்கை மக்களின் நலன் கருதியும், இலங்கையில் அமைதி மற்றும் மறு சீரமைப்பை நிலை நிறுத்தும் வகையிலும் இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், ஐ.நாவின் நிபுணர் குழு இலங்கை வர அனுமதிக்கப் போவதில்லை என அரச தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளியிடப்பட்ட போதும், நிபுணர் குழு இலங்கை வருவதற்கு உத்தியோகபூர்வமாக இலங்கையை அணுகியதா? அதற்கு உத்தியோகபூர்வமாக இலங்கை அரசு அனுமதி மறுத்ததா என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை.

எனினும் குறித்த நிபுணர் குழு இலங்கை வராமலேயே விசாரணைகளை நடத்தவது என்று முடிவு செய்து விட்டது. இனி அதில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வாறு இந்த விசாரணைகளில் பங்கு கொள்வது என்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மிக சாதாரண மக்கள் இந்த சாட்சியங்களை இலத்திரனியல் வழிமுறைகளில் மேற்கொள்வதென்பது சிரமம் என்பதால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கான வழிமுறைகளை அமைத்து பொதுமக்களின் சாட்சியங்களையும் முறைப்பாடுகளையும் ஆவணங்களையும் விசாரணைக் குழுவிற்கு பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிபுணர் குழு விசாரணைகளில் சாட்சியம் அளிக்க விரும்புபவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஊடாக அதனை மேற்கொள்ள முடியும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், இனி வரும் நாட்கள் தமிழர் பிரதேசங்களில் மிக அவதானிப்பிற்கும் அச்சுறுத்தலுக்குமான நாட்களாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். மக்கள் எவ்வாறு தங்கள் முறைப்பாடுகளை அளிக்கின்றார்கள் - இதற்கு யாரெல்லாம் உதவி செய்கின்றார்கள் - எங்கெல்லாம் சென்று இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பதெல்லாம் அவதானிக்கப் பட்டு, மக்களையும் அவர்களுக்கு உதவுகின்றவர்களையும் அச்சுறுத்தும் வேலைகளும் தொடரவே செய்யும். கடந்த காலங்களில் வட பகுதிகளுக்கு வரும் குறிப்பாக வன்னிப் பகுதிகளுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கின்ற வேளைகளில் பல சிக்கல்கள் எற்பட்டன. அவர்களிடம் வெளிப்படையாக மக்கள் தங்கள் பிரச்சினைகளை கூற முடியாத நிலைமைகள் உருவாக்கப்பட்டன. குறித்த பிரதிநிதிகள் சென்றதன் பின்னரும் அவர்களிடம் உரையாடிய பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டனர். இப்போது வன்னிப் பகுதிகளுக்கு எந்தவொரு வெளிநாட்டவரோ, தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளோ விஜயம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் முல்லைத்தீவு பகுதிக்கு விஜயம் செய்த ஒரு தொண்டு நிறுவனத்தினரை இலங்கை பொலிஸாரும், புலனாய்வாளர்களும் நேரடியாகவே சென்று அவர்களை வெளியேறுமாறு கூறினர். அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

தற்போதைய சூழ்நிலையில் வெளிநாட்டவர் கள் வட பகுதிக்கு வந்து மக்களை சந்திப்பதென்பது ஐ.நாவின் விசாரணைக் குழுவின் பின்னணியிலேயே நடைபெறுவதாக இலங்கை அரசும் அதன் பாதுகாப்பு தரப்பும் சந்தேகிக்கின்றன. ஆனால், எவ்விதப்பட்டும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் முறைப்பாடு களை சர்வதேச விசாரணக் குழுவிற்கு வழங்குவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. போர் முடிவுற்று ஐந்து வருடங்கள் கழிந்து விட்ட நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு வழிமுறைகளிலும் தங்களது போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக மிகத் துணிவுடன் தங்கள் சாட்சியங்களை முன்வைத்தும் வருகின்றனர். வடக்கிற்கு வெளியில், கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். தங்கள் பாதிப்புக்களையும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துகின்றனர். அச்சுறுத்தல்கள், மிரட்டல்களால் அவர்களை தடுக்க முடியாத நிலைதான் சம்பந்தப் பட்டவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, ஐ.நா விசாரணைக் குழு அதன் பணியை சரிவர மேற்கொண்டு, அதன் அறிக்கையை குறித்த நாளில் பூர்த்தி செய்து அதன் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுவதை யாராலும் தடுக்க முடியாது. நடைபெற்ற போரக்குற்றங்கள் குறித்த பதிவுகளுடன் அரசின் நிராகரிப்பும் ஒரு பதிவாகி சர்வதேச ரீதியில் ஒரு அவப் பெயரையே இலங்கைக்கு ஏற்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சம காலத்தில், அரசாங்கமும் ஒரு நிபுணர் குழுவை அமைத்து காணாமல்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கும் நடவடிக்கைகள் என்பன ஐ.நாவின் சர்வதேச விசாரணைக் குழுவை எவ்விதத்திலும் பாதிக்கப் போவதில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இவற்றை விடவும் இன்னுமொரு விடயத்தை நாம் இங்கு புரிந்து கொள்ள வேண்டும். ஐ.நாவின் விசாரணைக்குழு இப்போது பாதிக்கப்பட்ட மக்களிடம் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதென்பதும் அவர்களிடமிருந்து முறைப்பாடுகளுக்கான ஆவணங்களை பெற்றுக்கொள்வதென்பதும் ஒரு நடைமுறை ஒழுங்கிற்கானதேயாகும். ஏனெனில், நடந்து முடிந்த யுத்தத்தின் போது இடம்பெற்ற குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த முறைப்பாடுகளும், பதிவுகளும், ஆவணங்களும் சர்வதேச அமைப்புகள் பலவற்றிடமும் ஏற்கனவே உள்ளன. ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் மட்டுமல்லாது மனித உரிமை சார்ந்த அமைப்புகள் பலவற்றிடமும் அவை உள்ளன. கடந்த ஐந்து வருடங்களாக சேகரிப்பட்டவை இவை. எனவே, அவற்றை ஒருங்கிணைப்பது, ஒன்று சேர்ப்பது என்பது சர்வதேச விசாரணைக் குழுவிற்கு சுலபமான பணியேயாகும். எனவே, ஐ.நாவினால் அமைக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழு நவநீதம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப் பதைப் போல் அதன் பணியை வெளியிலிருந்து பயனுள்ள வகையில் நிறைவேற்றும் என்பதை நம்பலாம்.


APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# உங்கள் உடல் - சவமா? சிவமா?

நீங்கள் உயிர் வாழ்வதற்கான முக்கிய அம்சங்களில் ஒன்று, உங்கள் உடல். இந்த உடல் எப்படி ஒரு கருவியோ, அதேபோல, விதம் விதமான செயல்களுக்காக எத்தனையோ கருவிகள் உருவாக்கப் பட்டுள்ளன. உடல் வலிமை என்று வருகிறபோது விலங்குகளுடன் உங்கள் உடம்பை ஒப்பிடவே முடியாது. அவ்வளவு ஏன்? ஒரு வெட்டுக்கிளியை எடுத்துக் கொள்ளுங்கள். தன் உடலின் நீளத்தை விட 50லிருந்து 100 மடங்கு வரையிலான உயரத்திற்கு அதனால் குதிக்க முடியும். அப்படியானால், நீங்கள் ஆறடி உயரம் இருந்தால் 600 அடி உயரத்திற்கு நீங்கள் குதிக்க வேண்டும். அப்போதுதான் ஒரு வெட்டுக்கிளிக்கு நீங்கள் நிகராக முடியும்.

ஒரு புழு, பூச்சி, வெட்டுக்கிளி, புலி, மான், யானை இவற்றை தகுதிகளுக்கேற்ப ஒலிம்பிக் பந்தயம் வடிவமைக்கப்பட்டால் பதக்கம் வாங்குவது இருக்கட்டும். நீங்கள் அவற்றுக்குப் பக்கத்தில் கூடப்போக முடியாது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

உடல் வலிமை என்று வரும்போது மனிதர்களை விட விலங்குகளே வலிமையானவை. ஆனால் வெறும் பிழைப்பு என்ற எல்லையைத் தாண்டிச் செல்கிற தகுதி மனிதனுக்குக் கிடைத்திருப்பதுதான் முக்கிய மானது. பிழைப்பு என்கிற எல்லையைத் தாண்டி வாழ்வை அணுகவும், வாழ்வைக் கையாளவும் மனிதர்களுக்குத் தகுதிகள் இருக்கிறது. ஆனால் மனிதனோ, தன்னுடைய பிழைப்பான தரத்தை உயர்த்த மட்டுமே தன் சக்திகளைப் பயன்படுத்துகிறான்.

ஒரு காலத்தில், வெறுமனே உயிர் வாழ்வதற்கு இரண்டு வேளை உணவு மட்டுமே போதுமானதாயிருந்தது. இப்போது அதன் எல்லைகளை நிடித்திருக்கிறீர்களே தவிர, இன்னும் பிழைப்புதான் நடக்கிறது. மனிதன், தன் அடிப்படையான செயல் கட்டமைப்பை மிகவும் முட்டாள்தனமாகக் கையாள்வதற்கு இது அடையாளம். மிகவும் வித்தியாசமான முறையில் அதனைப் பயன் படுத்தும் வாய்ப்பு மனிதனுக்கு இருக்கிறது.

இவற்றை விஞ்ஞான ரீதியில் நம்மால் விளக்க முடியும். யோக மரபில், மனிதனின் முதுகுத்தண்டு "மேருதண்டம்" என்று அழைக்கப்படுகிறது. மேருதண்டம் என்றால் பிரபஞ்சத்தின் அச்சாணி என்று பொருள். ஒரு மனிதனுடைய முதுகுத் தண்டு எப்படி பிரபஞ்சத்தின் அச்சாணியாக முடியும்? உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அதிர்வு இருக்கிறது என்பதை நவீன விஞ்ஞானம் இன்று நிரூபித்திருக்கிறது. இயற்கையின் அதே 5 அம்சங்கள்தான், கோடிக்கணக்கான மனிதர்களுக்குள் அதிர்வுகளை ஏற்படுத்தி இன்றைய நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது. இது அறிவியல் பூர்வமான உண்மை. அதே புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான் ஆகியவைதான் பல அற்புதங்களை நிகழ்த்துகின்றன. இதை இன்னும் ஆழமாகப் பார்த்தால் ஒரே சக்திதான் பலவிதங்களில் செயல்பட்டு வருகிறது. படைப்பு என்று நீங்கள் எதனை அழைக்கிறீர்களோ அது பிரம்மாண்டமான வெற்றிடத்தின் மடியில் நிகழ்கிறது. கருப்பு வண்ணப் பொருள்தன்மை என்றும், கருப்பு வண்ண சக்தி என்றும் அதற்கு எத்தனையோ பேர்களை மனிதர்கள் கொடுக்க முயல் கிறார்கள். ஆனால் நீங்கள் அறிந்திருக்கும் எல்லையைக் கடந்தும் முழுமையான வெற்றிடங்கள் எத்தனையோ உள்ளன.

ஸ்தூலமாக நீங்கள் காணும் பொருள் தன்மையில் தொடங்கி தெய்வீகம் என்று எதை அழைக்கிறீர்களோ, இவை அனைத்திற்குமே இதுதான் அடிப்படை. ஒரு சுவரில் வண்ணம் பூசத் தொடங்கும்போது மிகவும் அடர்த்தியாக தொடங்கும் அந்த வண்ணக் கீற்று போகப்போக மெல்லிய தாகிக் கொண்டே வந்து ஒன்றுமே இல்லாமல் போவது போலத்தான் இதுவும். படைப்பு நிலையின் போக்கில் மனிதர்கள் இந்த வெற்றிடத்தை ஓரளவு நெருங்கி வருகிறார்கள். உங்களுக்குள் "இவை எல்லாம் எதற்காக?" என்கிற கேள்வியே இதனால்தான் வருகிறது. இந்தக் கேள்வி உங்களுக்குள் வந்தாலே ஒன்றுமற்ற தன்மையை எட்ட வேண்டும் என்கிற ஏக்கம் உங்களுக்குள் ஆரம்பித்து விட்டதை அறிந்து கொள்ளலாம்.




மனிதனைப் பொறுத்தவரை அடிப்படையான அதிர்வுகள் முதுகுத் தண்டிலிருந்து தொடங்குகின்றன. அது எவ்வளவுக் கெவ்வளவு சூட்சுமமான நிலையை அடைகிறதோ அந்த அளவுக்கு மேல் நோக்கிச் செல்கிறது. இல்லையென்றால் தொடங்கிய இடத்திலேயே நின்று விடுகிறது. அது சூட்சுமமாகிறபோதுதான் அதனை எல்லா இடங்களுக்கும் நீங்கள் கொண்டு செல்ல முடியும். அந்த அதிர்வுகள் எல்லா இடங்களிலும் பரவுகிறபோது உங்கள் புரிதலும் எல்லா இடங்களுக்கும் பரவுகிறது.


இப்போது "நீங்கள்" என்று எதை அழைக்கிறீர்களோ, அது உங்கள் புலன் களின் எல்லைகளுக்குட்பட்ட குறுகிய புரிதலாகத்தான் இருக்கிறது. உங்கள் எல்லையைக் கடந்திருக்கிற இன்னொன்றை யோ, இன்னொருவரையோ உங்கள் புரிதலுக்கு உட்படுத்த முடியாது. ஆனால் உங்கள் அதிர்வுகளை சீரமைத்தால் அதன் மூலம் உங்கள் அனுபவங்களின் எல்லை களை விரிவுபடுத்திக் கொண்டே போகலாம்.

"சிவன் தனது மூன்றாவது கண்ணைத் திறந்தார்" என்றால், தன் அனுபவங்களை எல்லையில்லாத அளவுக்கு விரிவுபடுத்தினார் என்றுதான் பொருள். அப்படியானால் இந்த பிரபஞ்சமே அவருக்குள் ஒரு பகுதி என்றும் அவரே அனைத்திற்கும் மையம் என்றும் பொருள். இதை எப்படி தெரிந்து கொள்வது?

காலம் பற்றிக் குறித்தும் வெளி குறித்தும் உங்களுக்கிருக்கும் புரிதல்கள் அனைத்தும் மிகப்பெரிய மாயை என்பதை இன்றைய நவீன விஞ்ஞானம் மிகத்தெளிவாக வெளிப் படுத்தியுள்ளது. காலம், வெளி இரண்டையும் உங்களால் விரும்பும் விதத்தில் நீங்கள் நீட்டிக்கவும், வளைக்கவும் முடியும். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை மீண்டும் கொண்டு வர முடியும். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு பின்னர் நிகழப் போவதை இப்போதே உருவாக்கவும் முடியும். இன்று விஞ்ஞானிகளில் ஒரு பிரிவினர் காலம் என்றும், வெளி என்றும் எதுவுமே இல்லை என்று வாதிடத் தொடங்கியுள்ளனர். அவர்கள் சொல்வது மிகவும் சரி.

ஆகவே, இந்தப் புரிதலின் அடிப்படையில் தான் உங்கள் முதுகுத்தண்டை மேருதண்டம் என்று சொல்கிறார்கள். அது பிரபஞ்சத்தின் அச்சாணியாகவும் இருக்க முடியும். எனவே இந்த உடலே ஒரு கருவி. இதனை உங்களுக்கு உணவு சேகரிக்கவும் மற்ற விடயங்களுக்காகவும் மட்டும் பயன்படுத்தப் போகிறீர்களா? அல்லது அதன் உச்ச பட்சமான சாத்தியத்தை நோக்கி பயன் படுத்தப் போகிறீர்களா? உடலை ஒரு கருவியாக பயன்படுத்துவீர்களென்றால் முதலில் அதனை உங்களுடன் அடையாளப் படுத்திக் கொள்வதை நிறுத்த வேண்டும். இந்த உடம்பை எங்கிருந்து சேகரித்தீர்கள் என்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் சேகரித்த ஒன்று நீங்களாக இருக்க முடியாது. குறிப்பிட்ட காலம் வரையில் அது உங்களுடையதாக இருக்கலாம்.

சில நாட்களுக்கு முன்பாக ஈஷா ஹோம் ஸ்கூலில் மனித உடல், உணவு பற்றி அவர்களுக்கு புதையல் வேட்டை ஒன்றை நடத்தினோம். அது முடிந்து ஒரு குழந்தை என்னிடம் வந்து சொன்னது, "ஒரு மனிதன் ஆண்டு ஒன்றுக்கு 1100 கிலோ உணவு



**சத்குரு வாசுதேவ்**

சாப்பிடுகிறான்". இன்னொரு குழந்தை வந்து சொன்னது, "ஒரு மனிதன் தன் மொத்த வாழ்நாளில் 50 டன் உணவு சாப்பிடுகிறான்" அப்படியானால் உங்கள் எடை எவ்வளவு இருக்க வேண்டும்? உணவை சேர்த்துக் கொண்டே போவது பற்றி மட்டுமல்ல இது. நீங்கள் சேகரித்துக் கொண்டே போகும் கர்மவினை எவ்வளவு என்று பாருங்கள். ஒவ்வொரு பிறவி தோறும் இந்த உடம்பை உதறிவிட்டு இன்னொரு உடம்பை எடுத்துக் கொள்கிறீர்கள். ஆனால் கர்மவினையையோ சேர்த்துக் கொண்டே போகிறீர்கள்.

மனித உடல் அற்புதமான ஒரு கருவி. இதன் நுணுக்கமான விடயங்களை நீங்கள் தெரிந்து கொள்ள ஒரு பிறவி போதாது. ஏதோ ஒரு விதத்தில் மனிதன் தன்னுடைய உடலோடு தன்னை ஆழமாக அடையாளப்படுத்திக் கொண்டிருப்பதால் இந்த உடலை ஒரு கருவியாக தள்ளி நின்று பார்க்க முடிவ தில்லை. உடலோடு இருக்கிற ஆழமான பற்றின் காரணமாகவும், அடையாளத்தின் காரணமாகவும், இந்த உடம்புதான் தான் என்று மனிதன் நினைத்துக் கொண்டிருக் கிறான். எப்போது இந்த உடலை நீங்கள் என்று பார்க்கிறீர்களோ அப்போதே அதனுடன் நிறைய உணர்ச்சிகள் சம்மந்தப் பட்டு விடுகின்றன. இந்நிலையில் உங்களால் உடலை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியாது. அதனால்தான் இந்த யோக மரபுக்கே பூத சக்தி என்று பெயர். ஐம்பூதங்களிடமிருந்து விடுதலையாவதை இது குறிக்கிறது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களுக்கும், உங்களுக்கும் இடையில் மிகச்சரியான முறையில் ஓர் இடைவெளியை உங்களால் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தால் உங்கள் உடலுக்கும் உங்களுக்கும் நடுவில் ஓர் இடைவெளியை உணர்வீர்கள்.

ஈஷா யோகாவின் அறிமுக வகுப்பிற்கு வந்த முதல் நாளிலேயே உங்களுக்கும் உங்கள் உடம்புக்கும் நடுவே ஓர் இடைவெளியை உருவாக்க நாங்கள் முயன்று வருகிறோம். அப்போதுதான் எவ்வளவு நல்ல கருவி ஒன்று உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நீங்கள் ஆனந்தம் கொள்ள முடியும். இந்த உடல் சாதாரண மான ஒன்றல்ல. பந்தத்திற்கும், விடுதலைக்கு மான அனைத்து அம்சங்களும் இதில் இருக்கின்றன. இந்த உடம்பின் சக்தி நிலையை சரியான விதத்தில் நீங்கள் மேலெடுத்துச் சென்றால் இதையே தெய்வீகத்தின் உச்சமாக உங்களால் உருவாக்க முடியும் அல்லது இறந்த பிணம் போல் இங்கே வாழவும் முடியும். இந்த உடம்பை நீங்கள் சிவமாக்குகிறீர்களா? சவமாக்குகிறீர்களா? என்பது உங்களைப் பொறுத்தது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது!

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க,
- குறைந்த வீதத்தில் மோட்கேஜ் பெற்றுக்கொள்ள,
- ரீபைனான்ஸ் செய்ய,
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க,
- பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ் எடுக்க,
- பவர் ஒப் சேல் நிலைமை தவிர்க்க,
- கடன்களை ஒன்றுபடுத்த



அத்துடன் உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள்.

எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000* மட்டுமே!

WIN UP TO
**$100,000***
Everyone Who Funds A Mortgage With US
Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00 மணி வரை**

MORTGAGE ALLIANCE Lic # 10530
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
Corporate Office : 112-895 Don Mills Rd, Toronto, ON, M3C 1W3
Office Phone : 416 391 3232
#1 Brokerage in Toronto*

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

*Listing commission does not include buyer brokerage commission of 2.5%

# மன்னாரின் துயரப் பதிவுகள்!

## தாயக மடல்

- ஆதித்தன் -

போர்க்காலங்களில் மிகுந்த துயரங்களுக்கு மத்தியில் தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் மன்னாருக்கு பிரதான இடமுண்டு. கொலை, கடத்தல் காணாமல் போதல் என, ஏதோ ஒரு அசம்பாவிதம் அக்காலங்களில் மன்னாரில் நாளாந்தம் நடைபெற்று வந்தது.

மன்னார் மாவட்டம் தீவுப் பகுதி என்பதால் முற்று முழுதாக கடல் வளத்தை கொண்டதாக காணப்படுவதோடு மன்னார் தீவுப்பகுதிக்குள் உள்ள அதிகளவான மக்கள் மீனவ குடும்பங்களாக உள்ளனர். கடற்கரைப் பிரதேசங்களையும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடற்படையின் பிரசன்னமும் அவர்களுடைய காவலரண் களும் அப்போது அதிகமாகவே இருந்தன.

இதன் காரணமாக அப்பிரதேச மீனவர்களே பெரும் இழப்புக்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டனர். போர் நடைபெற்ற காலத்தில் மன்னார் ஒரு எல்லைப் பிரதேசமாகவே இருந்தது. அதாவது போராளிகளதும், படையினரதும் எல்லைப் பகுதியாக அது இருந்தது. இதனால். வன்னி யுத்தம் தீவிரமடைவதற்கு முன்பிருந்தே மன்னார் பகுதிகள் மோதல்களும் குற்றச் செயல்களும், மனித உரிமை மீறல்களும் நடைபெற்றுகொண்டு இருக்கின்றன. 2006ஆம் ஆண்டு யூன் மாதம் மன்னார் வங்காலையில் பிஞ்சுக் குழந்தைகள் உள்ளிட்ட தமிழ் குடும்பம் ஒன்று சின்னாபின்னமாக்கப்பட்ட சம்பவத்தை எவரும் மறந்து விட முடியாது.

வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி மார்டீன் என்ற 35 வயதான தச்சுத் தொழிலாளி, அவரது மனைவி 27வயதான மேரி மதலேன், அவர்களின் பிள்ளைகளான லக்சிகா வயது 9, நிக்சன் வயது 7 ஆகியோர் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத படிக்கு கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். குறித்த அந்த தச்சுத் தொழிலாளி தச்சு வேலைக்காக பயன் படுத்தும் கூரிய ஆயுதங்களைக் கொண்டு அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்தப் பிஞ்சுக் குழந்தைகளது உடல்கள் கூரிய ஆயுதத்தினால் கிழிக்கப்பட்டிருந்தன. 9 வயது பெண்குழந்தையின் பிறப்புறுப்பிலும் கூரிய ஆயுதத்தால் குத்தியிருந்தார்கள். பின்னர் அவர்களின் கழுத்தை கயிற்றினால் கட்டித் தூக்கியிருந்தார்கள். மோதல்களின் போதும், எறிகணைகள் விழுந்தும் இறந்த உடலங்களைப் பார்த்திருக்கின்றோம். ஆனால் இவை கண்களால் பார்க்க முடியாத

அச்சமின்றி கடற்படையினரை பகிரங்கமாக அம்மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

1995முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் தங்களது உறவினர்கள் வீடுகளில் வந்து பிடிக்கப்பட்டும், கடத்தப் பட்டும் தள்ளாடி இராணுவ முகாம், தாராபுரம் கடற்படை முகாம், சனிவிலேச் கடற்படை முகாம் மற்றும் தலைமன்னார் கடற்படை முகாம்களுக்குள் கொண்டு செல்லப்பட்டனர் என உறவினர்கள் சாட்சியம் வழங்கினர். தாங்கள் இவற்றை நேரில் கண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன்,



காட்சிகள்.

இன்றும் கூகுல் போன்ற தேடுதளங்களில் மன்னார் குறித்த செய்திகளுக்கான படங்களைத் தேடும் போது இந்தப்படங்களை காணமுடிகிறது. மறக்க முடியாதபடி எல்லாமே நேற்று நடைபெற்ற சம்பவம் போல் கண் முன்னால் தெரிகிறது. இந்தக் கொடூரங்களுக்கு யார் காரணம் என்று தெரிந்திருந்தும் அவர்கள் தண்டிக்கப் படவில்லை. அச்சம்பவம் குறித்து விசாரிக்கப்படவும் இல்லை. அரசாங்கம் இந்த சம்பவத்தை ஒரு விடயமாகவே அச்சந்தரப்பத்தில் கணக்கிலெடுக்கவில்லை. மன்னாரில் அண்மையில் கண்டறியப்பட்டு, தோண்டப்பட்ட மனித புதைகுழி விவகாரமும் கூட மர்மமானதாகவே உள்ளது. இந்நிலை யில்தான், மன்னாரில் கடந்த சில தினங்களாக காணாமல் போனோர் தொடர்பில் அரசினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் நான்கு நாட்கள் நடந்துள்ளன.

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒவ்வொரு பிரதேசமாக அமர்வுகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், கடந்த 8,9,10,11ஆம் திகதிகளில் மன்னாரில் இந்த சாட்சியப் பதிவுகள் இடம்பெற்றன. இந்த சாட்சியங்களின் போது, மன்னார் மாவட்டத்தில் காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு முன் சாட்சி யமளித்தவர்களில் அனைவருமே தங்களது உறவுகள் காணாமல் போனமைக்கு கடற்படையினரே காரணம் என பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர். அத்துடன், தங்களது உறவுகள் காணாமல் போனதற்கு கடற்படையே பதில் கூற வேண்டும் எனவும் அவர்கள் தங்களது சாட்சியங்களில் தெரிவி த்துள்ளனர். இன்றும் கிட்டத்தட்ட நான்கு பாரிய கடற்படை முகாம்கள் மன்னார் மாவட்டத்தில் உள்ளன. இந்நிலையில் குறித்த காலப்பகுதியில் அக்கடற்படை முகாம்களில் கடமையாற்றிய அதிகாரிகளின் பெயர் விபரங்களையும் ஆணைக்குழுவிடம் சிலர் குறிப்பிட்டுள்ளனர். 1995 முதல் காணாமல் போனவர்களின் உறவினர் உட்பட இறுதியுத்தத்தின் சரணடைந்த போராளி களின் உறவினர் வரை சாட்சியங்களை வழங்கியுள்ளனர். மன்னாரில் ஒரு சாட்சியாகவும், துணிந்த ஆன்மீகவாதியாக வும் உள்ள அருட்தந்தை இராயப்பு ஜோசப் அவர்கள் இந்த ஆணைக்குழு மீது நம்பிக்கை கொண்டவராக இல்லை எனினும், அறிக்கையொன்றை கையளித்ததன் ஊடாக பிரச்சினைகளை விளக்கியுள்ளார்.

இந்த ஆணைக்குழு மீதான நம்பிக்கை யின்மைக்கான காரணத்தையும் அவர் விளக்கியுள்ளார். தமிழர்களுடைய பிரச்சினைகள் தீர்வுக்காக ஏற்படுத்தப்பட்ட மற்றைய ஆணைக்குழுக்கள் எல்லாம் மேற்கொண்டது எதுவுமில்லை. இந்த ஆணைக்குழுவும் அவற்றைப்போன்ற ஒன்றே என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஆணைக்குழு வழமை போல எல்லாவற்றை யும் பதிவு செய்துகொண்டு சென்றுள்ளது. மக்களது சாட்சியங்களை பதிவு செய்யும் இந்த ஆணைக்குழு மக்களுக்கான தீர்வுகளையும், தீர்ப்புகளையும் வழங்குமா என்பது சந்தேகத்திடமின்றி கேள்விக் குறிதான். இந்நிலையில், இந்த ஆணைக் குழுவிற்கான கால நீடிப்பும் இப்போது வழங்கப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர் மாற்றங்களும் இடம்பெறவுள்ளது. அதற்கு ஆலோசனை வழங்குவதற்கான ஆலோசகர் கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலங்களை இழுத்தடிப்பு செய்து, பிரச்சினைகளை நீர்த்துப் போகச் செய்ய மேற்கொள்கின்ற நடவடிக்கைகளாக மட்டுமே இவை இருக்கப் போகின்றது. காணாமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்றோ, இந்த ஆணைக்குழு இதற்கான ஒரு முடிவை அறிக்கும் என்றோ பாதிக்கப்பட்ட மக்களும் நம்பவில்லை.

ஆனால், தங்கள் பிரச்சினைகளை எங்கெல்லாம் சென்று சொல்ல வேண்டுமோ அங்கெல்லாம் சென்று சொல்ல வேண்டும். அதனூடாக அவை வெளியுலகிற்கு வரவேண்டும் என்கிற நோக்கத்துடனேயே மக்கள் பதிவுகளையும் சாட்சியங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இவற்றை மேற்கொண்டு விட்டு திரும்புகையில் அவர்கள் வாயினோலேயே இவ்வாறான கருத்துக்களை கேட்க முடிகின்றது.

# உங்கள் உடல்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

உடம்பு என்கிற கருவியின் உன்னதத்தை உணர்த்துகிற விதமாக பல மகத்தான ஞானிகள் தங்கள் போதனைகளைத் தந்திருக்கிறார்கள். ஆதி யோகியாகிய சிவனே இதில் பல அற்புதங்களை வழங்கியிருக்கிறார். ஆனால் இதனை உலகிற்கு போதிப்பது பற்றி அவருக்கிருந்த தயக்கத்தை நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். ஆரம்பத்தில் ஒருவருக்கு மட்டும் சொன்னதை ஏழு பேருக்கு சொன்னதோடு நிறுத்திக் கொண்டார். இது மிகவும் தெளிவான முடிவு. எழுபது கோடி பேரை வைத்துக் கொண்டு செயல்படுவதை விட ஏழுபேருடன் செயல்படுவது எளிது. அதற்கு அதீதமான நம்பிக்கையும், நெருக்கமும் தேவை. இந்த உடம்பு நான் அல்ல என்கிற தெளிவோடு உடம்பை விட்டுத் தள்ளி நிற்கும் வரை இது சாத்தியம் இல்லை.

மிக நிச்சயமாக, மனித உடல் என்பது மகத்தானதொரு கருவி. அதன் முழுமையான சாத்தியக்கூறு என்னவென்று நீங்கள் பார்க்க வேண்டும். புதிதாக ஒரு கார் வாங்கியிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த வாகனத்தில் என்ன வெல்லாம் சாத்தியம் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் திறமைமிக்க ஓட்டுனர் ஒருவரிடம் நீங்கள் அதனை ஒப்படைக்க வேண்டும். இது உங்கள் உடலுக்கும் பொருந்தும். அதனை எப்படி சரியாக பயன்படுத்துவது என்று தெரிந்து கொண்டு விட்டால் உடலையே தெய்வீகத்துக்கான ஏணியாகவும் பயன்படுத்தலாம். இன்னும் சரியாக உடலைப் பயன்படுத்தினால் அதுவே தெய்வீகம் என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்!


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# ஆதனம் வாங்குபவர்களின் நிலைப்பாடு மாறுகின்றது

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 421

மகாகவி பாரதியார் கூறியது போல 'காணி நிலம் வேண்டும். அங்கு ஓர் மாளிகை வேண்டும். அதனைச் சுற்றி மரங்கள் வேண்டும்.....' பாரதியின் கனவு நல்லதே. இன்றைய கனடிய நிலைமை முற்றாக வேறுமாதிரி உள்ளது. குறிப்பாக ரொறொன்ரோவின் நிலத்துடன் கூடிய ஆதன நிலைமை பாரதியின் கனவு எமது கனவாகவும் போய்விடுமா? நிலைமை எப்பொழுதும் மாறும். இதுவே மாறாது. இதனையே மக்கள் விரும்புகின்றார்கள். நிலத்துடன் கூடிய வீடு ஒரு கனவு. இது வசப்படும். அதற்குரிய எல்லா ஒழுங்கான நடவடிக்கைகளையும் முன் எடுக்க வேண்டும்.

இன்றைய ஆதன விலை அதிகரிப்பிற்கு குறைந்த வட்டி வீதமும் ஒரு காரணம் ஆகலாம். ரொறொன்ரோவில் '416' பகுதியில் நிர்மாணம் செய்யக்கூடிய நிலத்தின் அளவு சுருங்குகின்றது. அதனைச் சுற்றிய பகுதிகளிலும் இதே நிலைமை வெகுவிரைவில் ஏற்படலாம்? அதன் ஆரம்பம் தொடங்கிவிட்டது. மக்களின் அதிகரிப்பு, குறைந்த வட்டிவீதம், தொழில்புரிபவர்களின் சம்பள அதிகரிப்பு, கட்டிடப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மூன்று அரசுகளின் வரி அதிகரிப்பு, புதிது புதிதாக கொண்டு வரப்படும் வரிகள், புதுப்புது சட்டதிட்டங்கள் போன்றவை புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனத்தின் விலை அதிகரிப்பிற்குரிய காரணங்களில் சில. எனவே இதன் தொடர்ச்சியாக ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளின் விலையும் அதிகரிக்கும் (Resale Home Price). முதல் தடவை வீடு வாங்குபவர்களிற்கு தனிவீட்டின் (நிலத்துடன் கூடிய வீடு) மாதாந்த கொடுப்பனவு கட்டுக்கடங்காமல் போகலாம். இதனை அடைவதற்கு ஏதாவது ஒரு குடியிருப்பை தெரிவு செய்வதே முதலடியாகும். இதற்கு வாடகை வீடும் ஒரு வழியாகலாம் என சிலர் வாதிடலாம். ஆனால் அது தகுந்ததா?



குறிப்பிட்ட தொகை ஆரம்ப முதலீடு இருக்கும் எனில் (Downpayment) வருமானத்திற்கு ஏற்ப ஒரு குடியை வாங்குவது சிறந்ததாகலாம். இதுதான் 100% சிறந்த முடிவில்லாமலும் இருக்கலாம். தொடர்ந்து வாடகைக்கு இருப்பதனை விட வாங்குவது சிறந்ததாகலாம். மாதமாதம் நாம் செலுத்தும் பணத்தின் குறிப்பிட்டளவு சேமிக்கப்படுகின்றது. வாடகைக்கு இருந்தால் வருடாந்த வாடகை அதிகரித்தே செல்லும். ஆனால் முதல் தடவை ஒரு மனை / வீடு வாங்கினால் காலப்போக்கில் அடுத்த அடுத்த கட்டத்திற்கு செல்லலாம். வாடகைக்கு தொடர்ந்து இருந்தால் அடுத்த கட்டத்திற்கு செல்ல தயக்கம் ஏற்படலாம். பொதுவாக பலர் ஆதனம் வாங்குவதற்கு இது தகுந்த தருணமா? எனக் கேட்பார்கள். என்னுடைய பதில் எப்பொழுதும் இதுவே தகுந்த தருணம். சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உங்கள் வருமானத்திற்கேற்ப ஒரு மனை / வீடு வாங்குவது நல்லதாகலாம். 'எலி வளை எனினும் தனி வளை சிறந்தது'.

### கனடிய மக்களின் பொருளாதார மதிப்பு அதிகரித்துள்ளது! *(Assets Value)*

2013ஆம் ஆண்டில் மட்டுமே கனடிய மக்களின் நிகர மதிப்பு (Net worth) எட்டு வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு மூல காரணமாக ஆதன விலை அதிகரிப்பு மற்றும் பங்குச் சந்தை, மியூச்சுவல் ஃபண்ட் (Mutual fund) இன் அதிகரிப்பே ஆகும். 2008/2009 இல் ஏற்பட்ட பொருளாதார இறுக்கத்தில் (Recession) இருந்து மக்கள் வெளியே வந்துவிட்டார்கள் என்பதனை இந்த அதிகரிப்பு காட்டுகின்றது.

Economics Analytics அறிக்கையின் பிரகாரம் 2013 இன் இறுதியில் சராசரி கனடியர்களின் மொத்த பெறுமதி $564,834 ஆகக் காணப்பட்டது. அதேநேரத்தில் அவர்களின் கடன் $122,705 ஆக இருந்தது. ஆகவே நிகர பணத்தின் பெறுமதி (net worth) $442,130 ஆகக் காணப்படுகின்றது. இந்த பெறுமதி 2012 உடன் ஒப்பிடும்போது 7.7% அதிகரிப்பாக உள்ளது.

கனடாவின் அதிகூடிய பண அதிகரிப்பு அல்பேட்டா மாகாணத்திலும் இரண்டாவதாக ஒன்ராரியோ மாகாணத்திலும் காணப்படுகின்றது. கனடிய மத்திய அரசினதும், நிதி அமைச்சினதும் அடமானக்கடன் கொடுப்பனவில் ஏற்படுத்திய இறுக்கமான நிலைப்பாட்டினால் இந்தக் காலகட்டத்தில் அடமானக்கடனின் அதிகரிப்பு குறைவானதாகவே காணப்படு கிறது. ஆதனத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் அந்த வேகத்தில் அடமானக்கடனில் அதிகரிப்பு ஏற்படவில்லை.

இது ஒரு ஆரோக்கியமான நிலை. எமது பொருளாதார பெறுமதியின் அதிகரிப்பிற்கு ஆதனமுதலீடும் ஒரு சிறந்த வழியாகலாம்.
***You Richer Than You Think.***


# HomeLife/GTA Realty Inc. *Brokerage**

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**

***Raja Mahendran,*** P.Eng.
*Broker / Owner*



***5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969***

## HOUSE FOR SALE
**Brimly & Sheppard**
- Brand new (never lived)



- 5 bedrooms house for sale.
- 5 washrooms,
- Custom built on 70' frontage over 3500 sf.
- Stylish kitchen.

## HOTEL FOR SALE
* 78 Renovated rooms
* Brand Name
* Location: GTA
* Revenue: Over $1.5 Million
• Asking $6.5Million

## GAS STATION FOR SALE
* Brand new gas station.
* 1 Hour & 15 min. from Scarborough on HWY 12
* Brand name
* 6 Pumps
* TimHorton (rental income)
***Asking $3.45 Million***

## HOTEL FOR SALE
* Brand Name Hotel
* 1 ½ hour from Mississauga
* 60 Rooms
* Resonable Rate
* Income over $1Million Income
***Asking price***
***$1.5 Million***

## COMMERCIAL UNITS FOR SALE
Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

## SPACE AVAIL. FOR DENTAL OFFICE
1000 - 1800 Sq.ft available for dental office in GTA Square mall - Middlefield & Finch. Dedicated underground parking & locker included.

## CONDO. FOR RENT
**HWY 427 & Dundas**

Brand new TRIDEL Condo. 2 Bedrooms, 2 Washrooms. swmming pool, Rec. room, 24 hrs. security, Vacant

## HOUSE FOR RENT
**BELLAMY ELLESMERE**
2 Bedrooms + 1 Bedroom Bungalow house for rent. 2 kitchen, 2 washroom, Bsmt sep. entrance. Avail. September 01, 2014.

# கனேடிய பொதுத்தேர்தலும் தமிழரும்

கடந்த கனேடிய நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ரொறொன்ரோவில் இருந்து இரண்டு தமிழர் போட்டியிட்டனர். இத் தேர்தல் மே 02, 2011 இல் நடைபெற்றது. இதில் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் ஸ்காபரோ றூச்றிவர் தொகுதியில் ராதிகா சிற்சபைஈசனும், பழமைவாதக் கட்சியின் சார்பில் (ரா)கவன் பரம்சோதி ஸ்காபரோ தென்மேற்குத் தொகுதியிலும் போட்டி







யிட்டனர். இதில் ராதிகா சிற்சபைஈசன் வென்று இலங்கைத்தமிழரின் முதலாவது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக கனேடிய நாடாளுமன்றம் சென்றார். (ரா)கவன் பரம்சோதி இரண்டாம் இடத்திற்கே வரக் கூடியதாக இருந்தது.

அடுத்த கனேடிய நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் 19, 2015 இல் நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்நிலையில் கனேடிய அரசியலின் பிரதான கட்சிகள் தங்களது வேட்பாளர்களை தெரிவு செய்வதில் தற்போது மும்முரமாக உள்ளனர்.

2011 இல் 308 ஆக இருந்த தேர்தல் தொகுதிகள் 2015 இல் நடைபெற இருக்கும் தேர்தலில் 338 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதில் ஒன்ராரியோ மாகாணம் மட்டுமே 15 அதிகரிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளை பெறுகின்றன. ஒன்ராரியோ மாகாணத்தில் 2011 இல் 106 ஆக இருந்த தேர்தல் தொகுதிகள் 2015 இல் நடைபெற இருக்கும் தேர்தலில் 121 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

ரொறொன்ரோ மாநகரசபைக்குள் இரண்டு மேலதிக தொகுதிகள் வருகின்றன. இதனால் 2011 இல் 23 ஆக இருந்த தேர்தல் தொகுதிகள் 2015 இல் நடைபெற இருக்கும் தேர்தலில் 25 ஆக அதிகரிக்கப் பட உள்ளன. இவற்றைவிட சில தொகுதி களின் எல்லைகளும் மாற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் ரொறொன்ரோ மாநகர-சபைக்குள் ஏற்கனவே இருந்த Trinity - Spadina என்றும் தொகுதி University - Rosedale மற்றும் Spadina - Fort York ஆகிய இரண்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. Scarborough - Rough River மற்றும் Pickering - Scarborough East எல்லை மாற்றத்தின் மூலம் Scarborough - North மற்றும் Scarborough - Rouge Park ஆகிய இரண்டு புதிய தொகுதிகளாக உருவெடுத்துள்ளன. இவற்றைவிட எல்லை மாற்றத்தின் மூலம் DonValley - North என புதிய ஒரு தொகுதியும் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே Scarborough - Rouge River தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ராதிகா சிற்சபைஈசன் மீண்டும் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் Scarborough - North தொகுதியில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் (ரா)கவன் பரம்சோதியும் பழமைவாதக்கட்சியின் சார்பில் Scarborough - West தொகுதியில் மீண்டும் போட்டியிடலாம்.

இவற்றை விட இம்முறை லிபரல் கட்சியின் சார்பில் வேட்பாளர் தெரிவிற்கு ஹரி ஆனந்தசங்கரி Scarborough - Rough Park தொகுதியில் போட்டியிடுகிறார். லிபரல் கட்சியின் இத்தொகுதிக்கான வேட்பாளர் தெரிவு ஓகஸ்ட் 20, 2014இல் Scarborough Convention Centre இல் மாலை 6.00 மணியில் இருந்து 9:00 மணிவரை நடை பெறவுள்ளது. இவ்வேட்பாளர் தெரிவில் ஹரி ஆனந்தசங்கரி உட்பட நால்வர் போட்டியிடு கின்றனர். ஹரி ஆனந்தசங்கரி இவ் வேட்பாளர் தெரிவில் வெற்றிபெற்றாரானால் ஒக்ரோபர் 2015 இல் நடைபெறும் கனேடிய பொதுத்தேர்தலில் கனடாவின் பிரதான மூன்று அரசியல் கட்சிகளான பழமைவாதக்கட்சி, லிபரல் கட்சி மற்றும் புதிய ஜனநாயக்கட்சியின் சார்பில் குறைந்தது ஒவ்வொரு தமிழர் ஆதல் போட்டியிட சாத்தியக்கூறுகள் உண்டு.




| TAX FREE MONEY | AGE | FEMALE | | | MALE | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Term 10 | Term 20 | Term 40 | Term 10 | Term 20 | Term 40 |
| $ 500,000 (half million) | 25 | $ 19.25 | $ 27.00 | $ 42.75 | $ 29.70 | $ 37.35 | $ 54.45 |
| | 30 | $ 20.70 | $ 28.35 | $ 47.70 | $ 30.15 | $ 38.70 | $ 75.15 |
| | 35 | $ 25.20 | $ 33.75 | $ 80.10 | $ 30.15 | $ 43.65 | $ 108.0 |
| | 40 | $ 30.60 | $ 44.10 | $ 119.7 | $ 38.70 | $ 57.60 | $ 168.70 |

# ஹரி ஆனந்தசங்கரியை ஸ்காபரோ ரூச் பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக்க எங்கள் பூரண ஆதரவை வழங்கிடுவோம்

கனடிய நாடாளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டுத் தேர்தல் நடைபெற உள்ளது. இப்போதுள்ள நாடாளுமன்றத்தில் தமிழ்ச் சமூகத்தின் பிரதி நிதித்துவம் எமது சமூகத்தின் எண்ணிக்கையையும், வலுவையும் பிரதிபலிக்கவில்லை. அடுத்த ஆண்டு கனடிய நாடாளுமன்றத் தேர்தல்களில் எம்மக்களுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி, எமது பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்தவும் கனடியத் தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்க்கக் கூடிய தகுதியுள்ளவர்களை எமது சமூகம் சார்பாக வெற்றியீட்ட வைப்பதும் எமது கடமையாகும். இதற்குத் தமிழ்ச் சமூகத்தின் ஒன்றுபட்ட கடின உழைப்பும், ஒற்றுமையும் மிகத் தேவையானவை.

ரூச் பார்க் (Rouge Park) நாடாளுமன்றத் தொகுதியில் தகுதியும், திறமையும், அரசியல் நுண்ணறிவும் வாய்ந்த தமிழர் ஒருவர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் தெளிவாக உள்ளன. எனினும், தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முன்பாகக் கட்சியின் நியமனத் தேர்தலில் வெற்றி பெறுவது ஒரு முன் நிபந்தனையாகும். ரூச் பார்க் (Rouge Park) தொகுதியில் கனடாவின் லிபரல் கட்சியின் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்காகப் போட்டியிட எமது சமூகத்தின் சிறப்பு மிக்க ஆளுமையாளர்களில் ஒருவரான ஹரி ஆனந்தசங்கரி முன்வந்திருக்கிறார்.

இந்த நியமனப் போட்டியில் அவர் வெற்றி பெற்றால், வருகின்ற கனடிய நாடாளுமன்றத் தேர்தலில் எமது சமூகத்தின் சார்பாக திறன் வாய்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புக்கள் மிகச்சாதகமாக உள்ளன. அந்தவகையில் திரு ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் எங்கள் மக்களுக்காக ஆற்றிய நீண்டகாலச் சேவையையும், அவருடைய அனுபவத்தையும் கருத்திற் கொண்டு ரூச் பார்க் (Rouge Park) தொகுதிக்கு நடக்கும் வேட்பாளர் நியமனத் தேர்தலில் ஹரி ஆனந்தசங்கரியை வெற்றி பெறச் செய்யவேண்டியது இன்றைய காலத்தின் தேவை என நாங்கள் கருதுகிறோம்.

ஹரி, கால்டன் பல்கலைக்கழகத்தில் அரசியல் இளமாணிப் பட்டத்தையும், யோர்க் பல்கலைக்கழகத்தின் ஒஸ்கூட் சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் முடித்து ஒரு சிறந்த வழக்கறிஞராகக் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொழில் புரிந்து வருகிறார். நீண்ட காலமாகத் தமிழ்ச் சமூகத்துக்கும், தமிழியலுக்கும், இளைய தலைமுறைத் தமிழ்ச் சமூகத்தின் பொருண்மிய வளர்ச்சிக்கும், ஆளுமை உயர்வுக்கும், ஆழமாகப் பணி புரிந்து வருபவர். அவரது செயற்பாட்டில் ஆடம்பரம் இல்லை, ஆர்ப்பாட்டம் இல்லை. ஆனால் அறிவின் மலர்ச்சியும் பணியின் பெருமையும் நீண்டகாலக் கண்ணோட்டமும் சுடர்விட்டொளிரும்.

ஹரி கனடிய மக்களினதும், கனடியத் தமிழ் மக்களினதும் தேவைகளை நன்கு அறிந்தவர். தனது சிறுவயது முதல் பல் வேறுபட்ட சமூக அமைப்புக்களில் தொண்டராகவும், தலைவராகவும் பதவிகளை வகித்ததுடன், பல சமூக அமைப்புக்களை உருவாக்குவதிலும் முன்னின்று உழைத்தவர்.

ஹரி நம் இளைய தலைமுறையின் வளர்ச்சியிலும், மேம்பாட்டிலும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதுடன் இளைய தலைமுறைக்கான வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் திகழ்கின்றார். நம் சமூகத்தின் தேவைகளைத் தெளிவாகப் புரிந்து, கனடிய அதிகார மையங்கள் தொடக்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை வரை பல உலக அரங்குகளில் எமது உரிமைகளுக்காக வாதாடிய அனுபவம் உடையவர்.

நம் தாயக மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, சர்வதேசமெங்கும் வாழும் தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து செயற்பட்ட அனுபவம் நிறைந்தவர். 2009இல் 76 அகதிகளுடன் வந்த ஓசன் லேடி (Ocean Lady), 2010இல் 492 அகதிகளுடன் மற்றும் எம். வி. சன் சீ (M.V. Sun Sea) ஆகிய கப்பல்கள் வன்கூவர் கரையை வந்தடைந்த ஒரு நெருக்கடியான காலகட்டத்தின் போது கப்பலிலே வந்த எம்மவர்களைச் சந்தித்துக் கனடா மண்ணிலே அவர்களுக்கான உரிமைகளைத் தெளிவுபடுத்தி அவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்தவர்.

கனடிய நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தேவையான முழுத் தகுதிகளையும், அவற்றை மிஞ்சிய ஆளுமையையும் நிறைந்த ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு ரூச் பார்க் (Rouge Park) தொகுதியில் இடம் பெறும் நியமனத் தேர்தலில் வாக்களித்து, வெற்றிபெறச் செய்யுமாறு ரூச் பார்க் (Rouge Park) தொகுதித் தமிழ் வாக்காளர்களை அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், எமது முழு ஆதரவையும் ஹரி அவர்களுக்கு வழங்குவதில் பெருமையடைகிறோம்.




**On August 20, 2014**

**தெரிவு செய்யுங்கள்...**

# ஹரி ஆனந்தசங்கரி

இது எங்களின் காலம்.

காலம்: August 20th, 2014 நேரம்: 6:00 – 9:00pm
இடம்: Scarborough Convention Centre, 20 Torham Pl. Toronto, ON M1X 0B3

மேலதிக விபரங்களுக்கு:
416-507-4616 voteforgary.ca

Photo credit: Respective copyright owners.
Authorized by the Official Agent for Gary Anandasangaree Campaign.

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
| --- | --- |
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

Also Free Moving

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



**Lourdson Antonipillai**
(Sales Representative)
Dir: 416.738.8824
Offi: 905.201.9977
HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated

# காலத்தோடு வளரும் கணினிகள் - 51

1987ஆம் ஆண்டு PERL (Practical Extracting and Report Language) என்ற நிரலாக்கல் மொழி வெளிவந்தது. Python என்ற நிரலாக்கல் மொழி 1991ஆம் ஆண்டு வெளிவந்தது. Ruby என்ற நிரலாக்கல் மொழி 1994ஆம் ஆண்டு வெளிவந்தது. 1994ஆம் ஆண்டு Java என்ற நிரலாக்கல் மொழி வெளிவந்தது. இது இணையத்தள வடிவமைப்பில் பயன்படுத்தக் கூடியதாக உருவாக்கப்பட்டது. PHP (Personal Home Pages Hypertext Processor) என்ற நிரலாக்கல் மொழி 1995ஆம் ஆண்டில் வெளிவந்தது. Javascript என்ற நிரலாக்கல் மொழி 1995ஆம் ஆண்டு வெளிவந்தது. இது இணையத்தள வடிவமைப்பில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. UML (Unified Modelling Language) என்ற நிரலாக்கல் மொழி 1996ஆம் ஆண்டு வெளிவந்தது. C# (C-sharp) என்ற நிரலாக்கல் மொழி 2000ஆம் ஆண்டில் வெளிவந்தது. இது. NET சூழலில் மிகவும் முக்கியமான ஒரு நிரலாக்கல் மொழியாக விளங்குகின்றது.

இங்கே குறிக்கப்பட்ட நிரலாக்கல் மொழி-களைப்போல் எண்ணற்ற நிரலாக்கல் மொழிகள் அவ்வப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. நாங்கள் சில நிரலாக்கல் மொழிகளைப் பற்றி மட்டும் இந்தத் தொடர் கட்டுரையில் உரையாடியுள்ளோம் என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும். கூகிள் நிறுவனம் JavaScript என்ற நிரலாக்கல் மொழிகளிற்குப் பதிலாக Dart என்ற நிரலாக்கல் மொழியை உருவாக்கியது. 2014ஆம் ஆண்டு ஜொப்ஸ் ரக்ரர் (Jobs Tractor) என்பவர் கணினி நிரலர்களுக்கான தொழில் வாய்ப்புத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆண்டில் பிரபல்யமாகவுள்ள நிரலாக்கல் மொழிகளை அட்டவணைப் படுத்தியுள்ளார். இந்த அட்டவணையில் காணப்பட்ட நிரலாக்கல் மொழிகள் பின்வருமாறு: Java, PHP, Objective C, Java for Android, SQL, JavaScript, Ruby, C#, Python, C++, C, Action Script, ASP.net, Perl, Scala, Visual Basic. இங்கு Java அதிகம் பிரபல்யம் உள்ளதாகக் காணப்படுகின்றது. 1989ஆம் ஆண்டு ரிம் பேனேர்ஸ் லீ (Tim Berners Lee) இணையத்தைக் கண்டுபிடித்தபோது HTML (Hypertext Programming Language) என்ற நிரலாக்கல் மொழியையும் உருவாக்கினார். HTML என்ற நிரலாக்கல் மொழியின் அறிமுகத்தோடு முதலாவது World Wide Web மகாநாடு 1994ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. 1994ஆம் ஆண்டு Internet Engineering Task Force அமைப்பு HTML செயற்பாட்டக் குழுவை நிறுவியது. 1984ஆம் ஆண்டு யூலை மாதம் HTML 2 வெளிவந்தது. March 1995,ல் HTML 3 வெளிவந்தது. 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நெற்ஸ்கேப் (Netscape) உருவானது. 1994ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் World Web Consortium உருவானது. இப்பொழுது HTML இன் வடிவம் 5 பாவனையில் உள்ளது. மைக்கிரோ சொவ்ற் நிறுவனத்தால் இன்ரநெற் எக்ஸ்புளோரர் (Internet Explorer) என்ற மென்பொருள் 1995ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கணினி ஆய்வாளர்கள் 2014ஆம் ஆண்டில் கணினி நிரலர்களாக வர விரும்புபவர்கள் கற்க வேண்டிய நிரலாக்கல் மொழிகளாக Java, C Language, C++, C#, Objective C, PHP, Python, Ruby, Javascript, SQL ஆகியவற்றை தெரிவுசெய்துள்ளார்கள்.

இணையத்தளங்களில் தரவுத்தளங்களை நிறுவுவதற்கு XML (Extensible Markup Language) என்ற நிரலாக்கல் மொழி பயன்படுத்தப்படுகின்றது. XML என்ற நிரலாக்கல் மொழியின் முதல் வடிவம் 1997ஆம் ஆண்டிற்கும் 1998ஆம் ஆண்டிற்கும் இடையில் உருவாக்கப்பட்டது.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

விளம்பரம் பத்திரிகையில் "வெகுளாமை" என்ற தலைப்பில் என்னால் எழுதப்பட்ட தொடர்கட்டுரை நூலுருவில் வெளிவந்துள்ளது என்ற செய்தியை அறிந்திருப்பீர்கள். இந்த இந்த நூலினை வாங்கி வாசித்தவர்கள் பகிர்ந்து கொள்ளும் விமர்சனங்கள் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. உங்கள் கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள். இந்த நூலின் பிரதியை வாங்கிக்கொள்ள விரும்புபவர்கள் விளம்பரத்தின் பணிமனையில் வாங்கிக்கொள்ளலாம்.



# சாரதி அனுமதி பத்திரம் இல்லாதவர்களுக்கான - அடையாள அட்டை காட்


## கனடிய தகவல் தொடர் 222

## Photocard ID

கடந்த மூன்று வருடங்களாக கனடாவின் மாகாண அரசினால் நடைமுறைபடுத்தி வரும் இந்த அடையாள அட்டை வழங்கு முறை பலரும் அறிந்த ஒரு விடயமாக இருக்கும்.

ஆனால் கடந்த மாதம் தமிழ் முதியவர் ஒருவருக்கு உதவிக்காக சென்றபோது அவரது படம் கையொப்பங்கள், விலாசம் உட்பட பல விடயங்களை உறுதிப்படுத்தும் வலிமையான கனடிய அரசினால் வழங்கப்படும் அடையாள அட்டை அவரிடம் அந்த நேரம் இருக்கவில்லை. இதனால் அவர் எடுத்துக் கொண்ட விடயத்தினை பூரணமாக முடிக்க முடியாத அந்த நிலையில், அங்கு பணியாற்றிய அதிகாரிகள் மாகாண அரசினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு மூன்றாவது வருடமாக நடைமுறைப்படுத்தி வரும் இவ் அடையாள அட்டை தொடர்பான வசதிகள் பற்றி அவரிடம் குறிப்பிட்டார்கள். 'விளம்பரம்' பத்திரிகையின் அபிமான வாசகர்களுக்கு இதுபற்றி தெரியப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அப்போது தோன்றியது.

ஏனெனில் கனடாவில் எந்த இடத்திலும் ஒரு விடயத்தினை முன்னெடுக்கும் போது எங்களின் அடையாளத்தினை உறுதிப் படுத்துங்கள் என கோரினால் இலகுவாக எடுத்துக்காட்டும் சிறிய அட்டை 'சாரதி அனுமதி பத்திரம்' (Driver's license).




எல்லோரும் பின்பற்றும் ஒரு விடயம் ஆகும். ஏனெனில் அதில் தங்களின் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, உயரம், படம், மாதிரி கையொப்பம் போன்ற விடயங்கள் நீண்ட இலக்கங்களினால் உருவாக்கப்பட்ட குறியீட்டில் (அந்த இலக்கத்தினுள் பிறந்த திகதி, மாதம், ஆண்டு உள்ளடக்கப் பட்டிருப்பதுடன் குடும்ப பெயர் எது என்ற ஒரு குறியீடும் இருக்கும்) உறுதிப்படுத்தப் பட்டு அரசினால் வழங்கப்பட்டிருக்கும். அதன் அடிப்படை விபரங்கள் யாவும் கணினி மையங்களின் பதிவுகளில் இருப்பதால் என்றும் அது ஒரு வலிமையுடைய ஒரு அடையாள அட்டையாகவும், இலகுவில் எந்த நேரமும் எடுத்து செல்ல கூடியதாகவும் இருக்கும். ஆனால் இந்த வலிமையான அடையாள அட்டையினை பெற வேண்டுமாயின் எழுத்துப் பரீட்சையை தொடர்ந்து வாகனம் செலுத்தப் பழகி இரு வீதி பரீட்சைகளிலும் சித்தியடைய வேண்டும். இது எல்லோருக்கும் சாத்திய பட கூடிய விடயமா? உதாரணமாக!

1. முதுமை காலங்களில் கனடாவுக்கு வந்து வாழும் முதியவர்கள்.
2. உடல், உள வலிமை குன்றியவர்கள்.
3. உடல் நோய் உட்பட பல வேறு காரணங்களினால் சாரதி அனுமதி பத்திரத்தினை பறிகொடுத்தவர்கள்.
3. விழிப்புலன் இழந்தவர்கள் அல்லது பார்வை குறைந்து கொண்டு போகும் நிலையில் இருப்பவர்கள்.

இவர்கள் யாவரும் இந்த நாட்டில் வாகனம் செலுத்தும் அனுமதிபத்திரம் பெற்று அதனை எந்த இடத்திலும் அடையாள அட்டையாக காட்டும் வாய்ப்புகள் இருக்கமாட்டாது.

இத்தகைய நிலைமையிலிருப்போர் எவரும் முழுமையாக சாரதி அனுமதிபத்திரம் மாதிரி யான வடிவத்தில் (Same security features as the drivers' license) அடையாள அட்டையாக மாத்திரம் உபயோபடுத்து வதற்காக மாகாண அரசு புதியதொரு அடையாள அட்டையினை கடந்த யூலை 2011 யிலிருந்து அமல்படுத்தி வருகின்றது. அதுவே 'Ontario photo id card' ஆகும்.

தற்போதைய மாகாண முதலவர் கத்லீன் வின் (Ms. Kathleen Wynne) அவர்கள் ஒன்ராரியோ மாகாண போக்குவரத்து அமைச்சராக இருந்த போது 2011 யில் இதனை முதன் முதலில் நடைமுறைப் படுத்தினார். இதனை அறிமுகப்படுத்திய போது இது தொடர்பான செய்தியினை ஆங்கிலத்தில் பின்வருமாறு அவர் வெளியிட்டார்.

'Our government is delivering on our commitment to offer a photo card identification for Ontarians to help make life easier for the many who do not or choose not have driver's license but who still need government issued identification. I am pleased, we are moving forward on this important initiative'. - Kathleen Wynne

(சாரதி அனுமதி பத்திரம் இல்லாத நிலையில் இருப்பவர்களுக்கு வசதியான, படத்துடன் சேர்ந்த அடையாள அட்டையினை எங்கள் அரசு விநியோகித்து வருகின்றது. முக்கியமான இந்த விடயத்தினை முன் எடுத்து நடைமுறை படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.)

இது அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்ப சில மாதங்களில் 40,000 அட்டைகள் ஒன்ராரியோ மாகாணத்தில் விநியோகிக்கப் பட்டு விட்டன எனவும் மாகாணத்தில் சுமார் ஒரு மில்லியன் மக்களுக்கு இந்த அட்டை தேவையாக உள்ளபடியால் அரசு அலுவலகத்தில் (Service Ontario Office) இன்றும் இதனை பொதுமக்கள் பெற்ற வண்ணமேயுள்ளனர் என புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.


இவ் அட்டைக்கு விண்ணப்பித்து 4-6 கிழமைகளில் தபாலில் இதனை அனுப்பி வைப்பார்கள். மாகாண சாரதி அனுமதி பத்திரம் போன்ற வடிவில் வழங்கப்படும் இவ் அட்டையினை பெறுவதற்கு ஒருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

- 16 வயதுக்கு மேற்பட்டவர்.
- ஒன்ராரியோ மாகாணத்தை வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.
- சட்டரீதியான பெயர், பிறந்த திகதி, கையொப்பங்கள் நிரூபிக்கப்படல் வேண்டும்.
- சாரதி அனுமதி பத்திரம் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.
- $35 டொலர் கட்டணம் செலுத்த வேண்டும். (ஐந்து வருடங்களுக்குரிய கட்டணம்)
- அரச அங்கீகாரம் பெற்ற அடையாள அட்டையாக பயன்படுத்தலாமே தவிர வாகனமோட்ட அனுமதிக்கமாட்டாது.
- ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் புதுப்பிக்கப்படல் வேண்டும்.
- வதியும் விலாசம் மாறினால் உடனடியாக அறிவித்து புதிய அட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

கனடாவின் தேசிய விழிப்புலன் இழந்தோர் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி திரு. போல் ரிங்

Mr. Paul Ting, (executive director of the Canadian national institute of the blind) அவர்கள் இச்சேவையை மகிழ்ச்சியுடன் பாராட்டியதுடன் கண் பார்வை தெரியாதவர்கள் மட்டுமல்லாது பார்வை குறைபாடு காரணமாக சாரதி அனுமதி பத்திரம் இழந்தவர்களுக்கும் இது ஒரு வரபிரசாரம் என குறிப்பிட்டிருந்தார்.

இவ் அரச அங்கீகாரத்துடன் வழங்கப்படும் அடையாள அட்டையினை 'ஒன்ராரியோ அரச சேவை' (Service Ontario Centres) நிலையங்கள் என உள்ள ஏதாவது ஒரு இடத்தில் நேரடியாக சென்று விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
உதாரணமாக ஸ்காபரோவில் பின்வரும் இடங்களை குறிப்பிடலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


**AUM WELLNESS CLINIC IN**

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

| | | |
|---|---|---|
| முதுகுவலி | கழுத்துவலி | தோள்பட்டைவலி |
| முழங்கால் வலிகள் | தீராததலைவலி | நரம்புப்பிடிப்பு |
| நீரிழிவு | தூக்கமின்மை | கொலஸ்ரோல் |
| உடல் எடை குறைத்தல் | இரத்த ஓட்டத்தை | சீராக்குதல் |

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata

Based on Appointment



**Cell: 416.890.9217 Office: 647.304.6046**
**5215 Finch Ave. E. #220, Toronto, ON**

# சர்ச்சை: நட்வர் சிங் புத்தகமும் இந்திய அரசியலும்!

இந்திய ஊடகங்களில் இப்பொழுது 'ஹாட் டாபிக்' இந்திய வெளியுறவுத்துறை முன்னாள் அமைச்சர் நட்வர்சிங்கின் புதிய புத்தகம்தான். 'ஒரு வாழ்க்கை போதாது' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள இந்தப் புத்தகத்தில், 'இலங்கைத் தமிழர்கள்' பிரச்சினையை இந்தியா கையாண்ட விதம் தொடங்கி டில்லியில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகளுக்குப் பின்னால், மேல்மட்டத்தில் நிகழ்ந்த பல விடயங்களை பகிரங்கப்படுத்தியுள்ளார். குறிப்பாக சோனியா காந்தி ஆளுமை பற்றி நட்வர்சிங் எழுதியுள்ள விடயங்கள் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

## யார் இந்த நட்வர்சிங்?

34 ஆண்டுகள் இந்திய வெளியுறவுத் துறையில் பணியாற்றியுள்ள 84 வயதாகும் கே. நட்வர் சிங், நேரு விசுவாசி, 24 ஆண்டுகள் காங்கிரசில் இருந்தவர். சோனியா காங்கிரஸின் அதிகார மையமான காலம் தொடங்கி 'உணவுக்கு எண்ணெய்' ஊழலில் பெயர் அடிபட்டு நட்வர்சிங் பதவி இழந்தது வரை, சோனியாவுக்கு மிக நெருக்கமான நம்பிக்கைக்குரிய காங்கிரஸ் தலைவர்களில் நட்வர்சிங்கும் ஒருவராக இருந்தார். சோனியாவின் பல முக்கிய உரைகளைத் தயாரிக்க உதவியவர், பல வெளிநாடு சுற்றுப் பயணங்களில் கலந்துகொண்டவர், பிரதமர் பதவிக்காக மன்மோகன் சிங்கை ஏற்றுக்கொள்ள செய்தவர். அரசு விருந்துகளுக்கு மத்தியில் சோனியா துணுக்கு எழுதிய சீட்டை நட்வர் சிங்கிடம் அனுப்பி வைப்பார், பிரியங்கா, ராகுலிடம் சொல்லாததைக்கூட நட்வர்சிங்குடன் சோனியா பகிர்ந்துகொள்வார் என்று அப்போது சொல்லப்பட்டது.

வெளியாகி ஒரு மாதத்துக்குள் 50,000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி சாதனை படைத்துள்ள 'ஒரு வாழ்க்கைப் போதாது' புத்தகத்தில் இருந்து சில பகுதிகள் இங்கே...

## ராஜீவ்காந்தி சோனியா திருமணம்:

'நட்வர் மற்றவர்களிடம் இருந்து நீங்கள் கேள்விப்படுவதற்கு முன்பு நானே சொல்லிவிடுகிறேன். ராஜீவ் காந்திக்கு திருமணம் ஆகப்போகிறது' என இந்திரா காந்தி 1967இல் ஒரு நாள் என்னிடம் கூறினார். 'யார் அந்த அதிர்ஷ்டசாலிப் பெண்' என்று கேட்டேன். 'ஓர் இத்தாலிய பெண், இருவரும் கேம்பிரிட்ஜில் சந்தித்திருக்கிறார் கள். ஒருவரை ஒருவர் மிகவும் விரும்புகிறார்கள்.' 'திருமணம் எப்போது?' 'பிப்ரவரியில்' என்றார் இந்திரா.


அப்போது ராஜீவ்காந்தி நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த பிரம்மச்சாரியாக இருந்தார். வசீகரமான ஆளுமை கொண்டவர். ராஜீவ் பற்றி பல வதந்திகள் அக்காலத்தில் உலவின. எல்லாவற்றுக்கும் ராஜீவ் காந்தி - ஆண்டானியோ அல்பினா மெய்னோ திருமணச் செய்தி முற்றுப்புள்ளி வைத்தது. அப்போது சோனியாவுக்கு 19 வயது. நாட்டின் செல்வாக்குமிக்க அரசியல் குடும்பத்தில் வாழ்க்கைப்படுவதுடன், நேரு - இந்திரா பாரம்பரியம் எனும் அமைப்புக்குள்ளும் வாழ வருகிறார். டியூரினில் இருந்து தில்லிக்கு பெரிய பாய்ச்சல்தான்.

1968 பிப்ரவரி 25இல் திருமணம் நடைபெற்றது. மறுநாள் புதுமணத் தம்பதிக்கு ஹைதராபாத் இல்லத்தில் இந்திரா வரவேற்பு விருந்து கொடுத்தார். வசீகரமான ராஜீவ், மேல்தட்டு நாகரிகம் கொண்ட சோனியா - இருவரும் நல்ல ஜோடியாக இருந்தனர். எல்லோர் கண்களும் மணமகள் சோனியா மீதுதான் இருந்தன. அப்பொழுது அவர் எவ்வளவு பதற்றமாக இருந்தார் என எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. ரோமன் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த சோனியா முற்றிலும் அந்நியமான சூழலில் இருப்பதாக உணர்ந்தார். கலாசார அதிர்ச்சி அவருக்கு பதற்றத்தை கொடுத்தது. இந்திய மொழிகள், கலாசாரம், பழக்கவழக்கங்கள், பாரம்பரியம், வரலாறு, மதம் பற்றி அவருக்கு போதுமான புரிதல் இருக்கவில்லை. மேலும், அவருக்கு இந்தியாவில் நண்பர்களும் இல்லை.

'எனது வாழ்க்கையில் வேறு யாரும் இருந்ததில்லை' என்று சோனியா என்னிடம் ஒரு முறை கூறினார். ராஜீவும் சோனியாவும் திருமணம் செய்துகொள்ள உலகையே பகைத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில், ராஜீவ் மீதான அவரது காதலும், அவர் மீதான ராஜீவின் காதலும் அவ்வளவு பெரிதாக இருந்தது.

## ராஜீவ் காந்தி பிரதமராவதை சோனியா தடுத்தார்:

காதல் திருமணம், கணவரின் அன்பு, உலகப்புகழ் பெற்ற மாமியாரிடம் இருந்து கிடைத்த பயிற்சி என சோனியாவின் ஆரம்ப இந்திய நாட்கள் மகிழ்ச்சி நிரம்பியிருந்தன. அதிர்ஷ்ட வெளிச்சத்தில் அவர் ஒய்யாரமாக நடைபயின்றார். இந்திரா காந்தி 1984 அக்டோபர் 31இல் படுகொலை செய்யப்பட்ட போது இந்த உச்சகட்ட மகிழ்ச்சி முடிவுக்கு வந்தது. சோனியாவும் அவரது உதவியா-ளரான ஆர்.கே.தவானும்தான் இந்திரா காந்தியின் தோட்டக்கள் பாய்ந்த உடலை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். ராஜீவ் காந்தியை இந்திரா காந்தி இடத்தில் தேர்வு செய்து காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது. சோனியா ஒரு பெண் புலி போல ராஜீவ் பிரதமராவதை எதிர்த்துப் போராடினார். ராஜீவும் கொல்லப்படலாம் என சோனியா அஞ்சினார். ஆனால், அவரது போராட்டம் வெற்றிபெறவ-ில்லை. ராஜீவுக்கு பிரதமராவைத் தவிர வேறு வழிகள் இருக்கவில்லை. அதனை அவர் தன் கடமையாக நினைத்தார். 'தனிப்பட்ட நலன்கள் பெரிதல்ல' என்று அவர் சோனியாவிடம் சொன்னார். சோனியாவின் கவலையில்லா நாட்கள் முடிவுக்கு வந்தன.



ஆரம்பத்தில் ராஜீவ் காந்தி அரசியல் செயல்பாடுகளில் இருந்து சோனியா விலகியேயிருந்தார். அறிமுகம் இல்லாதவர் களுடன் அதிகம் பேசாமல் இருந்தார். அவர் பிரதமரின் மனைவியாக வெளிநாடுகளுக்கு சென்றார். ஆனால், எந்த நாட்டின் தலைவருடனும் அவர் அதிகம் பேசி யாரும் பார்த்ததில்லை. ஆனால், தொடர்ந்து அவரால் அப்படி இருக்க முடியவில்லை. அவர்கள் அரசியல் நாடகத்தின் மையமாகவே இருந்தனர் என்பதால் சோனியாவால் வாழ்க்கையை விலகியிருந்து பார்க்க முடியவில்லை. 1991 மே 21இல் தமிழகத்தின் ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட போது இதுவும் ஒரு முடிவுக்கு வந்தது. சோனியா வாழ்வில் இருந்து வசந்தம் வெளியேறியது.

ராஜீவ்காந்தி இறுதிச்சடங்கிற்கு பிறகு, அடுத்த தலைவரை தேர்வு செய்ய வேண்டி யிருந்ததால் டில்லி அரசியல் நடவடிக்கை கள் பரபரப்பானது. சோனியாதான் தலை-வராக வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். அந்த யோசனையை ஏற்க அவர் மறுத்துவிட்டார். ராஜீவ் நினைவு களுடன் சோனியா தனிமையில் வாழ்ந்தார். 1991 முதல் 1998 வரை இது நீடித்தது. இக்காலகட்டத்தில் அவரை அரசியலுக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. தால்கோத்ரா கார்டனில் நடைபெற்ற காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் இது வெளிப்படையாக தெரிந்தது. சோனியா வந்தபோது, எல்லோரும் எழுந்து நின்று, 'சோனியா சோனியா' என கோஷம் எழுப்பி அவரை மேடையில் அமர வற்புறுத்தினர். பத்து நிமிடங்களுக்கு கைதட்டல் ஓயவில்லை. 'இந்த கோஷங்கள் முடிவுக்கு வராவிட்டால் நான் வெளியேறிவிடுவேன்' என்று சோனியா உறுதியாக கூறிவிட்டார்.

## ராஜீவ் காந்தி கொலை வழக்கும் நரசிம்மராவ் மீதான சோனியா வருத்தமும்:

சோனியாதான், நரசிம்மராவை பிரதமராக்கி னார் என்றாலும் அவரை சோனியாவுக்கு அவ்வளவாக பிடிக்காது. 1994 டிசம்பரில் ஒருநாள் நரசிம்மராவுடனான எனது உறவு சீரான பிறகு, 5 ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள தனது வீட்டில் வந்து என்னை பார்க்கச் சொன்னார் ராவ். அவர் வழக்கத்துக்கு மாறாக பதற்றமாகவும் நிலை கொள்ளாமலும் இருந்தார். 'நான் சோனியா காந்தியை ஒரு கை பார்த்துவிடுவேன். ஆனால், வேண்டாம் என நினைக்கிறேன். அவரது சில ஆலோசகர்கள் எனக்கு எதிரான கருத்துக்களை கூறிக் கொண்டிருக்கின்றனர். அவற்றை நான் பெரிதாக நினைப்பதில்லை. ஆனால் அது என் உடல்நலத்தை பாதிக்கிறது. நான் விலக வேண்டும் என்று சோனியா நினைத்தால் அதை சொன்னாலே போதுமானது. அவரது விருப்பங்கள் மற்றும் தேவைகளை நான் கச்சிதமாக நிறைவேற்றி இருக்கிறேன்'' என்று கூறினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு மிகவும் மெதுவாக நடந்து வந்தது குறித்து சோனியாவுக்கு அதிருப்தி என்பது மட்டும் எனக்கு தெரிந்திருந்தது. அதனைச் சொன்னேன். ப. சிதம்பரத்தை தேவையான ஆவணங்களுடன் சோனியாவைப் பார்க்க அனுப்பியதாக ராவ் கூறினார். வழக்கின் நிலை குறித்து விளக்க உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானை அனுப்பியதாக வும் கூறினார். இறுதியாக, தானே சம்பந்தப்பட்ட கோப்புகளுடன் சோனியாவைப் பார்க்கச் சென்று, அதில் உள்ள சட்ட சிக்கல்களை எடுத்துக் கூறியதாக தெரிவித் தார். சோனியா எல்லாவற்றையும் கேட்டுவிட்டு எதையும் கூறவில்லை என்றார் அவர். 'எல்லாவிதங்களிலும் அவரிடம் தன்மையாக நடந்துகொள்கிறேன். ஆனால், அவர்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# JEN BOOK STORE

## Scarborough நகரில் ஒரு புத்தகசோலை

## *Ontario* பாடத்திட்டத்திற்கு ஏற்ப புத்தகங்கள்

## *JK* தொடக்கம் *Gr 12* வரையிலான

அனைத்து பாடப்புத்தகங்கள் **(Text Books)** மற்றும் அனைத்து செயல்நூல்களும் **(Work Books)** மிகவும் மலிவு விற்பனையில் உள்ளன.

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு நல்லதோர் தொடக்கம்

**JEN BOOK STORE.**

உங்கள் பிள்ளைகள் **Math, English, Science** ஆகிய பாடங்களில் பின்தங்கி உள்ளார்களா? கவலைவேண்டாம். இலவச ஆலோசனைகளுடனும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஏற்ற புத்தகங்களை கனடாவில் பன்னிரண்டு வருடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் தேர்ந்து எடுத்து தருகிறார்கள்.




## *3001 Markham Road, Unit 21 Scaborough ON*

## *TEL: 416.738.8824 / 416.335.1500*

# கோப்பி, தேநீர் அதிகம் பாவிப்பதனால் உடல் நிலை பாதிக்கப்படுமா?

கடந்த இதழ்தொடர்ச்சி...

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

மேலும் கோப்பி, தேநீர் பாவிக்கும் இயல்புடையோருக்கு உணவில் உள்ள இரும்புச் சத்தை உட்கவரும் தன்மை குறைந்து விடலாம் எனவும் அறிய முடிகின்றது. உடலில் உள்ள கல்சியத்தின் மீதும் "காஃபீன்' சில பாதிப்புக்களை உண்டு பண்ணும் எனவும் கூறுவதுடன் கல்சியம் உடம்புக்குத் தேவையான பாதுகாப்பாகும். அதாவது எலும்புகள் உருவாக, வலுவாக ஏதுவாக அமைகின்றது என்பதை நாம் நன்கு அறிவோம். அதனைக் கருத்தில் கொண்டு தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்துக் கொள்வது நன்று.

'காஃபீன்' ஒருவர் நுகரும் போது அவரின் உடல் எவ்வளவு 'காஃபீன்' வெளியேற்று கின்றதோ அதற்கு அமைய கல்சியத்தை யும், சிறுநீரையும் வெளியேற்ற வேண்டிய நிலை கட்டாயம் ஏற்படும் எனக் கூறப்படு கின்றது. எனவே ஒருவர் அடிக்கடி கோப்பி, தேநீர் அருந்துவதினால் அன்னாரின் எலும்புகள் படிப்படியாக மெலிந்து தடிப்பு தன்மை குறையத் தொடங்கும் எனவும் கூறப்படுகின்றது. ஏதும் தாங்க முடியாத தாக்கம் ஏற்படின் எலும்புகள் முறிவு தெறிவுகளும் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது.

இளம் பெண்கள் எடுக்கும் உணவில் வேண்டிய கல்சியம், மக்கினீசியம் இருப்ப தில்லை. அல்லது குறைந்து காணப்படும். இதனால் அன்றாடத் தேவைப்படும் தேவையை பூர்த்தி செய்ய முடிவதில்லை. இந்நிலையில் 'காஃபீன்' அடங்கிய பானங்களை அருந்துவதினால், கல்சியம் மக்னீசியம் தேவைக்கு உயர் தன்மை பொருந்திய பால் பொருட்கள், வளங்களைப் பாவிக்க வேண்டிவரும்.

மேலும் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது, 'காஃபீன்' பானங்களைப் பாவிக்கும்போது பால் பொருட்களையும் உண்டால் உடலில் உள்ள கல்சியம், மக்னீசியம் தேவையை நிறைவு செய்யாது. 'காஃபீன்' உடன் கல்சியம், மக்னீசியம் சேர்ந்து உடலைவிட்டு வெளியேறுகின்றது. இதனால் உடம்புக்குத் தேவையான கல்சியம், மக்னீசியம் பற்றாக்குறை ஏற்படலாம் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

ஒருவர் நாளாந்தம் 4 முறை கோப்பி தேநீர் பானங்களை அருந்தி வந்தால் மனப்பாதிப்பு அடைய வழியுண்டு. உடலில் இருந்து கல்சியமும் வெளியேறும். அது மாத்திரமின்றி சோடியம், மக்னீசியம் வெளியேறுகின்றது. அத்துடன் நின்றுவிடாது நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட ஏதுவாகும் எனவும், இது என்ன நிலையால் ஏற்பட்டது என்பதை இலகுவில் கண்டு அறிவது கடினம் எனவும் கூறப்படுகின்றது. மனநோய் சில வேளைகளில் ஏற்படின் உடல்நிலை தாக்கப்படும். இதனால் மருந்துகளை தேவையில்லாமல் அடிக்கடி பாவிக்கும் நிலை வரலாம் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.



பெரியவர்களுக்கு அளவிற்கு மிஞ்சிய 'காஃபீன்' நுகர்ச்சியினால் கிடுகிடுப்பு, எரிச்சல் தன்மை, ஏக்க உணர்வு, அமைதி யின்மை, தசைநடுக்கம், உறக்கமின்மை, தலைவலி போன்ற நிலைமைகள் ஏற்படும். சிறுபிள்ளைகளைப் பார்வையிடும்போது சிறுசிறுப்புடன் காணப்படுவர். எளிதில் எதிலும் வெறுப்புதன்மை, கோபம் ஏற்படும் நிலை, மனநிலை மாற்றம் நிகழலாம் எனவும், நடுக்கம், கூச்சநிலை போன்றவை யும் பொறுமை இழந்து கஸ்டத்துடன் கட்டுப்படுத்த முடியாத தன்மையும் வரலாம் எனவும் கூறியுள்ளார்கள்.

தற்போதைய ஆய்வின்படி "காஃபீன்" பானங்களினால் சிறுநீர்ப்பை புற்றுநோய் கூட வரலாம் எனவும் கூறப்படுகின்றது. அத்துடன் நின்றுவிடாது மலக்குடல்புற்று வர இடம் உண்டு எனவும் ஆய்வு கூறுகின்றது.

பெரும்பாலும் கோப்பி, தேநீர் அளவு மீறி அருந்தி வருவோர் உணவில் உள்ள இரும்புச்சத்தை இழந்து உட்காருவதற்கு கூட கஸ்டப்படுவர். எனவே இப்பானங்களி னால் தீங்கு ஏற்பட இடம் உண்டு என்பதை அறிந்து தேவைக்கு மிஞ்சி கண்ட நேரங்களில் இவற்றை அருந்துவதை தவிர்ப்பது நன்று.

மரணநிலை ஏற்படாத போதும் உடல்நிலை பாதிக்கப்பட்டு எமக்கும் மற்றோருக்கும் கவலை ஏற்படுத்தி வெறுப்பு நிலையும் வரஇடம் உண்டு. எனவே எம்மை நாம் பாதுகாப்பது மிக நன்று.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



*Train to be a ...*
**Community Service Worker** With CO-OP



*Other Diploma Programs:*
**Computerized Accounting**
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
**Network Engineering**
Microsoft | IT Academy Program
**Business Administration**
**Medical Office Assistant**
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome
Customized Corporate Training available for:
*MS-Office 2003, 2007, 2010*
*Upgrade MS-Office 2003 to 2007 or 2010*
*Microsoft server 2003 and 2008 Subjects*
*A+ Certification / Cisco CCNA*
OACC PROUD MEMBER
Call Now: (416) 840-9179
*Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005*
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
www.CitiCollege.ca
citi COLLEGE
Financial Assistance may be available to those who qualify


# சர்ச்சை...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

போனில்கூட பேசுவதில்லை" என்றார்.

காங்கிரஸ் தலைவரானார் சோனியா: இலட்சியமிக்க, அதிகாரமிக்க உறுதியான தலைவரானார். 1998 மார்ச் 14 தில்லி ஸ்ரீ கோட்டையில் நடந்த காங்கிரஸ் கமிட்டி சிறப்பு கூட்டத்தில் காங்கிரஸ் தலைவராக சோனியா பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவருக்குக் கீழ் எதிர்ப்புகள் நசுக்கப்பட்டன. அவரது மௌனம் ஓர் ஆயுதம், அவரது



- தொகுப்பு நித்திலன் -

சோனியா இந்திய மண்ணில் காலெடுத்து வைத்த நாள் முதல் அரச குடும்பத்தவர் போல நடத்தப்பட்டார். அவரும் முக்கியமானவர் போலவே நடந்துகொண்டார். காலப்போக்கில் அவர் தயக்கமான, பதற்றமான பெண்மணியில் இருந்து ஒவ்வொரு அசைவும் ஒரு செய்தி, குளிர்ந்த பார்வை ஓர் எச்சரிக்கை. எதிர்க்கட்சிகள்கூட அவரை தற்காப்பு கவசத்துடனே அணுகினர். 'சோனியாஜி தவறே செய்யமாட்டார்' என்றுதான் ஆதரவாளர்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனாலும், சோனியா ஒருபோதும் தனது எச்சரிக்கை உணர்வை கைவிடுவதில்லை. தனது மனதை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. ரகசியமானவராகவும் சந்தேகம் கொண்டவராகவும் இருந்தார். இதனால், அவர் வியக்க வைத்தாரே தவிர மதிக்கப்படவில்லை. இந்த காலகட்டத்தில் நான் சோனியா காந்தியை அடிக்கடி சந்திக்கத் துவங்கியிருந்தேன். 10 ஜன்பத் இல்லத்திற்கு நான் தினமும் சென்றேன். 'பிரச்சனைகளைத் தீர்க்க அவருடன் உள்ளோரில் நீங்கள்தான் சிறந்த நபர்' என்று சில 'நலம் விரும்பிகள்' கூறினர். சோனியாவுக்கும் எனக்குமிடையே நடை-பெற்ற அரசியல் விவாதங்கள் தீவிரமாக, பிரத்யேகமானதாக, குறிப்பிட்ட தலைப்பு பற்றியதாக இருந்தன. அவர்கள் குடும்பத்திற்கு சர்வதேச பொறுப்பு இருப்பதையும் ராஜீவ் மரணத்திற்குப் பின் அது மறக்கப்பட்டதையும் நினைவுபடுத்தினேன். அவர் அதை புதுப்பிக்க வேண்டும் என்றேன். 'எப்படி' என்று கேட்டார். வெளியுறவுத்துறையில் உள்ள முன்னாள் சகாக்கள் மூலம், இந்தியா வரும் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் அவரையும் வந்து பார்க்க ஏற்பாடு செய்வேன் என்று கூறினேன்.

சோனியா பிரதமராவதைத் தடுத்த ராகுல் காந்தி, இலங்கை விவகாரம் உள்பட மற்றும் பல அடுத்த இதழில்

# சாரதி அனுமதி...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

1. Cedarbrae mall
   3495 Lawrence Ave. East

2. 4800 Sheppard Ave. East, unit 112

3. 2300 Lawrence Ave. East

மிசிசாகா நகரில் பின்வரும் முகவரியில் உள்ளது.

1. 425 Dundas St. East unit 2

2. 5035 Hurontario St.

3. 6295 Mississauga Road North, Unit 101

மார்க்கம் நகரில் பின்வரும் முகவரியில் உள்ளது.

5694, Highway 7, Markham

ஒருவர் தான் வாழும் நகரில் உள்ள அலுவலகத்திற்கு மட்டுமே செல்ல வேண்டு என்று இல்லை. மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு அரச அலுவலகத்துக்குச் சென்று விண்ணப்பிக்கலாம்.



AERO COURIER
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
Tel: 416.292.0444
5635 Finch Ave East Unit 2&3
Toronto On.M1B 5K9

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# "பதமலர் பரவும் அடியரை இதமுடன் காக்கும் நல்லூர் கந்தன்"

## நல்லூர் கந்தனின் மகோற்சவத்தை ஒட்டியது

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் கந்தப் பெருமான் கலியுகவரதன் எனப்படுகிறான். குறிஞ்சி நிலக்கடவுள் ஆனதால் குறிஞ்சிக்கிழவன், மலைக்கிழவன் எனவும் அழைக்கப்படுகின்றான். ஆறு குழந்தைகளும் அம்மையால் ஒன்றிணைக் கப்பட்டமையினாலும் வாசனை உடையவன் ஆனமையாலும் கந்தன் எனவும் அக்கினியின் கரத்தால் ஏந்தப்பட்டமை யினால் அக்கினிப் பூ எனவும் கங்கையில் வளர்ந்தமையினால் காங்கேயன் எனவும், சரவணப்பொய்கையில் தோன்றியமையால் சரவணபவன் எனவும், கார்த்திகைப் பெண்களிடம் பால் உண்டமையினால் கார்த்திகேயன் எனவும் கடம்ப மாலை அணிபவன் ஆனமையால் கடம்பன் எனவும் விசாக நட்சத்திரத்திற்குரியவன் ஆனமை யால் விசாகன் எனவும், ஆறுமுகங்கள் உடையவன் ஆனமையால் ஆறுமுகன் எனவும் அடியார் மனத்தில் உறைபவன் ஆனமையால் குகன் எனவும், இனிமையான நலனை விரும்பி அதனை அடியவர்க்கு அருள்கின்றமையால் சுப்பிரமணியன் எனவும், குழந்தைச்சாமி ஆனமையால் உமைபாலன் எனவும் தேவரைக் காத்தமையால் தேவசேனாதிபதி எனவும் முருகனை பல்வேறு பெயர் கொண்டு அழைப்பர். மேலும் சிவகுரு, தகப்பன் சாமி ஞானகுரு, வேலன், கதிரேசன் என்ற பெயர்களும் முருகனுக்கு உண்டு. சிவசக்தி ஆகிய இரண்டும் ஒன்றுபடும் நிலையே சுப்பிரமணியம் என்று சொல்லப்படும்.

முருகு என்றால் அழகு இளமை, இனிமை, மணம் மகிழ்ச்சி தெய்வத்தன்மை எனப்பொருள்படும். அவன் அழகன், குழகன், அழகினை அனைத்து மக்களும் ஆராதனை செய்வதனால் தான் முருகனை வழிபடும் அடியவர் தொகை அளவுக்கு அதிகமாக உள்ளது. மெய்தான் அரும்பி, விதிர்விதித்து, கைதான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, உள்ளம் வெதும்பி, பள்ளம் நோக்கிப் பாயும் வெள்ளம் போல முந்தியடித்துக் கொண்டு முருகனின் அருகணைந்து அடியவர் பரவுவர். வைதாரையும் வாழ வைப்பவன் என்பது அவனது விசேட தன்மை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞான சக்தி என்ற இம்மூன்று சக்திகளும் முருகனிடம் அமைந்துள்ளன. வள்ளியம்மை இச்சாசக்தி, தெய்வயானை கிரியாசக்தி, ஞான சக்தி வேல். வேல் ஆயுதம் அம்மையால் அழகனுக்கு வழங்கப்பட்டதாகும். ஆணவத்தை அழித்து அளப்பிலா நன்மை களை அருளவல்லது. அது ஞான வேல்.

சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மும்மலங்களும் முருகனால் அடக்கப்பட்டன. அவை அழிக்கப்படவில்லை. தாரகன் யானையாகி ஐயனாருக்கு வாகனமானான். சிங்கன் சிங்கமாகி அம்பிகைக்கு வாகன-மானான். சூரன் சேவலும் மயிலுமாகி முருகனுக்கு கொடியும், வாகனமும் ஆனான். ஆறுமுகங்கள், ஆறு குணங்கள், ஆறுபடை வீடுகள், முருகனுக்கு அணி சேர்க்கின்றன. முருகனுடைய ஐந்து முகங்களும் சிவ சொரூபமானவை. ஆறாவது முகம் சக்தி சொரூபமானது.



திருப்பரங்குன்றம் படை வீடுடைய பரமன் அவன். திருச்செந்தூர், திருவாவினன் குடி, குன்றுதோறாடல், திருவேரகம், பழமுதிர் சோலை, திருப்பரங்குன்றம் ஆறுபடை வீடுகளாகும். முற்றறிவுடமை வரம்பிலின்ப முடமை. இயல்பாகவே பாசமின்மை.

முடிவிலா ஆற்றலுடமை, பேரருளுடமை, தம்வயமுடமை முருகனின் ஆறு குணங்களாகும். யுத்த களத்தில் சூரனுக்குக் காட்டப்பட்ட விஸ்வரூபம் என்னும் திருப்பெருவடிவம் முருகப் பெருமானும் சிவனும் ஒருவரே என்பதைக் காட்டுவ தாகும். சிவனே அவன். காவடி எடுத்தல் முருகனுக்குரிய விசேடவழிபாடாகும். கதிர்காமக் கந்தன் காவடிக்கந்தன் எனப்படுகின்றான். சிவகிரி, சக்திகிரி என்னும் மலைகளை காவடியாக எடுத்து வந்த இடும்பனை ஆட்கொண்டு அருள் புரிந்தவன் முருகன். கா+அடி என்பதே காவடியாகும். சரண் புகுந்தோரை காக்கும் சேவடி என்பது அதன் பொருள். தமது பூவடி நோக தோளில் காவடி சுமந்து நாவரல் பாவடி பாடி பக்தர்கள் கந்தனின் சேவடி பரவும் காட்சி கண் கொள்ளாக்காட்சியாகும்.

ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லூர் கந்தனுக்கு ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்து சைவமக்கள் மனதில் பக்தி உணர்வு பக்தர்களின் முருகா, கந்தா, கடம்பா, கார்த்திகேயா, வேலவா என வாய் ஓயாது உரைக்கும். மேலோங்கி இருக்கும் அதனை மணிவாசகர் வார்த்தையில் பின்வருமாறு கூறலாம்


என்பு நைந்து உருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென்று அரற்றி
உரோமம் சிலிர்ப்ப கரமலர் மொட்டடித்து
இருதயம் மலர கண்களிகூர

அப்போது உடல் சிலிர்க்கின்றது. வாய் சொற்கள் தடுமாறுகின்றன. இருதயம் விரிந்து மலர்கின்றது. கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளிர்க்கின்றது. ஒரு ஆனந்த பரவசநிலை ஏற்படுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு முறையுடன் அதனை செயற்பட வைக்கும் ஒரு சாதனம் தெய்வ வழிச் சிந்தனையாகும். இறைவனிடம் மனம் ஒன்றிவிடும் போது நமது உடல், உணர்வு, சிந்தனை, செயல், அனைத்துமே ஒருமுனைப்பட்டு இறைவன் நினைவன்றி வேறில்லை என்ற ஒரு மேலான நிலையை அடைகின்றது. அடியவரின் இந்த இன்ப அன்பு நிலையை யோக சுவாமிகள் பின்வருமாறு அருளியுள்ளார்.

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம் பல பேசிக் கும்பிடுவர்
தேடுவர் செய்வதொன்றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர் தம் அடியரே

அலங்காரக் கந்தனாக விளங்கும் நல்லூரானை நாளும் வலம் வந்து வணங்கினால் எல்லா நலனும் எய்தப் பெறலாம் என்பது யோக சுவாமிகள் அருள் வாக்கு. புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தேவர் குலம் காத்த செல்வ நல்லூர் குமரன் வீதி வலம் வரும் காட்சியை அகக் கண்ணில் கண்டின்புற்று வாழ்வில் நலம் பல பெற்று வாழ்வோம்.

எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை என்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து
நல்ல மருந்தொரு குரு மருந்து
நல்லூரில் இருக்கின்றதை நாடிடு வீரே!



நா. க. சிவராமலிங்கம்

MALAYSIA GRILL
Malay & Thai Food
HWY 07 & MARKHAM
10% Off
Visa Debit Order Over $20.00
Before tax.
Excluding lunch specials
Expire: September 15, 2014
15% Off
Cash Order over $20.00
before tax.
Excluding Lunch specials.
Expire: September 15, 2014
8 Washington Street, Markham, ON
(Plaza behind Dairy Queen & Tim Hortons)
Malaysiagrill.ca
Contact: 289.554.1128

# ரஜினி சிரித்தார், பாராட்டினார்!

## சிவகார்த்திகேயனுடன் ஒரு தொலைபேசி உரையாடல்!

'தற்போதைய தமிழ் சினிமாவின் போக்கு மிக நன்றாக இருக்கிறது. இளைய தலைமுறை இயக்குனர்கள் புதுப்புது விதமாக கதைகளம் அமைக்கிறார்கள். இது முன்பு எப்போதும் இல்லாத நல்ல விடயமாக இருக்கிறது. தமிழ் சினிமாவின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையை இது ஏற்படுத்துகிறது.' நம்பிக்கையுடன் பேசுகிறார் சிவ கார்த்திகேயன். தமிழ் சினிமாவின் இன்றைய நம்பிக்கை நட்சத்திரம்!

பேட்டிக்கு அனுமதி கேட்டு அவரை கைபேசியில் தொடர்பு கொண்டோம். 'வெளியூரில் இருக்கிறேன். ஏன் இப்பொழுதே கேளுங்களேன், போனிலேயே பேட்டியை முடித்துக்கொள்வோம். சென்னைக்கு திரும்பிய பிறகு படம் எடுத்துக் கொள்ளலாம்.' பெரிய நடிகர்களுக்கான பந்தா சிறிதும் இல்லாமல் சினேகபாவத்துடன் பேசுகிறார். இன்று கோடம் பாக்கத்தில் கையில் அதிக படங்களுடன் மிகவும் 'பிஸி'யாக இருக்கும் இரு நடிகர்களில் ஒருவர். (இன்னொருவர் விஜய் சேதுபதி!)

ஒன்றிரண்டு வருடங்களுக்கு முன்பு 'சின்னத்திரை' தொகுப்பாளர், இன்று தமிழ் சினிமாவின் முன்னணி 'ஹீரோ'. மிகக் குறுகிய காலம்தான், சிவகார்த்திகேயனின் வளர்ச்சியைப் பார்த்து கோடம்பாக்கத்தில் 'லைட் பாய்' முதல் இயக்குநர்கள் வரை அனைவருமே ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'மெரினா', '3', 'எதிர்நீச்சல்', 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'மான் கராத்தே' என்று சிவகார்த்திகேயன் 'சினிமா கிராப்' உச்சியை நோக்கி பாய்ந்து கொண்டிருக்கிறது.

சின்னத்திரையில் இருந்து பெரிய திரைக்கு வந்திருக்கிறீர்கள். இந்த வளர்ச்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?

என் தலைமுறைக்கு முன்பே பலர் தொலைக்காட்சியிலிருந்து சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள். இன்றைய இந்திய சூப்பர் ஸ்டார் சாருக்கான், நம்ம விவேக் சார்... இன்னும் நிறைய பேரைச் சொல்லமுடியும். என் தலைமுறையில் தமிழில் மட்டுமே பத்துக்கு மேற்பட்டவர்கள் வந்திருக்கிறார் கள். இன்னும் நிறைய பேர் இனி வருவார்கள். ஏனெனில், இப்போது சின்னத்திரைக்கும் பெரிய திரைக்குமான இடைவெளி குறைந்துகொண்டே வருகிறது. சின்ன மீனை போட்டு பெரிய மீனை பிடிக்கிற கதைதான்.

புது இயக்குனர்களிடம் நீங்கள் கதை கேட்பதில்லை என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேசிக்கொள்கிறார்களே?

இரண்டாவது கேள்வியே இப்படியா... ஏண்ணே... மொத்தமே நான்கைந்து படங்கள்தான் செய்திருக்கிறேன். 'மெரினா' வந்து மூன்று வருடங்கள்கூட முழுமையாக வில்லையே, அதற்குள்... எதற்குண்ணே இதெல்லாம். உண்மையிலேயே பேசிக் கொள்கிறார்களா அல்லது பேட்டி சுவாரசியத்துக்காக நீங்கள் கொழுத்திப் போடுகிறீர்களா? எனக்கு திருமணமாகி



விட்டது. திருமண வாழ்க்கை ரொம்ப சந்தோஷமாகவே இருக்கிறது. இதனால், என்னோடு நடிக்கும் நடிகைகளோடு என்னை இணைத்து கிசு, கிசு எழுதுவதற்கான வாய்ப்பு ஊடகங்களுக்கு இல்லாமல் ஆகிவிட்டது. எனவே, வேறு வித்தியாசமாக ஏதாவது பரபரப்பு செய்யலாம் என நினைக்கிறீர்கள் போலிருக்கிறது. நான் இதுவரை நடித்துள்ள படங்களில் நான்கு இயக்குனர்கள் புது இயக்குனர்கள்தான். யார் கதை சொன்னாலும் கேட்பேன். எனக்கு பிடித்திருந்தால் நிச்சயம் அந்த கதைக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பேன்.

பல கதாநாயகிகளோடு நெருக்கமாக நடிக்கிறீர்கள். இதை உங்கள் மனைவி எப்படி எடுத்துக்கொள்கிறார்?

ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கும்போது அங்கு பணியாற்றும் மற்ற பெண்களோடு நாம் பேசி பழகுவதில்லையா, அது போலத்தான் இதை எடுத்துக்கொள்ளனும். என் மனைவியும் அப்படித்தான் எடுத்துக் கொள்கிறார்கள். பெண்களே இல்லாமல் சினிமா எடுக்கமுடியாது, அப்படியே எடுத்தாலும் அதை யாரும் பார்க்க மாட்டார்கள்.

உங்களுடன் நடித்த நடிகைகளில் உங்களை அதிகம் கவர்ந்தவர்?

என்னை விட மூத்த நடிகர்கள் ஐம்பது, நூறு நடிகைகளுடன் நடித்திருப்பார்கள். அவர்களிடம் இந்த கேள்வியை கேட்டாலே யாரையும் குறிப்பிட்டு சொல்லமாட்டார்கள். அப்படி ஒருவரை பிடிக்கும் என்று சொன்னால் மற்றவர்களை பிடிக்கவில்லை என்று அர்த்தமாகிவிடும். நான் இதுவரை மொத்தமே ஐந்து நடிகைகளோடுதான் நடித்திருக்கிறேன். இந்நிலையில் இதற்கு எப்படி பதில் சொல்ல முடியும். இப்படி வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள்... என்னுடன் ஜோடியாக நடித்த, இனியும் நடிக்கப் போகிற அத்தனை நடிகைகளையும் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

ரஜினிகாந்துடன் உங்களை ஒப்பிட்டுப் பேசுகிறார்கள் ரசிகர்கள். நீங்களும் ரஜினி மாதிரி நன்றாக பேசி நடிக்கிறீர்கள்.

உங்களுக்கு ஒரு தகவல் சொல்கிறேன். ரஜினி சாரே ஒரு முறை, தற்செயலாக சந்தித்த போது, அவர் முன் என்னை அப்படி பேசி நடிக்கச் சொன்னார். நானும் பேசி, நடித்து காட்டினேன். சிரிச்சி, மனம் விட்டு பாராட்டினார்.

தற்போது நடித்துக்கொண்டிருக்கும் படம்?

என்னை வைத்து 'எதிர்நீச்சல்' எடுத்த துரை. செந்தில்குமார்தான் தற்போது 'டாண்' படத்தின் இயக்குநர். பாலுமகேந்திரா பல்கலைகழகத்திலிருந்து வந்தவர். நிறைய நவீன தமிழ் இலக்கியம் படித்தவர். இவரிடமிருந்து நானும் புத்தகம் படிக்கிற பழக்கத்துக்கு ஆளாகிவிட்டேன். 'எதிர்நீச்சல்' போலவே 'டாண்' படமும் மக்களிடம் நல்ல வரவேற்பை பெறும்.

**- பேட்டி - சிவதானு -**


**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

*HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING*

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*



**நுணாவில் - கனேடியன் அபிவிருத்திச்சங்கம்**

கனடா வாழ் நுணாவில் மக்களின் கோடை கால ஒன்று கூடலும் விளையாட்டு போட்டிகளும் எதிர்வரும் ஆவணி **(August)** மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணியிலிருந்து மாலை 6:00 மணிவரை நடைபெறவுள்ளது. அனைத்து நுணாவில் மக்களின் வருகையை அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

**இடம்: *Thomson Memorial Park***
***1005 Brimley Road, Toronto, ON M1P 3EB***

அருள்: 416.709.2783 கதிர்: 416.399.7250
துரைராஜா: 416.829.4044 கேதா: 416.677.4707

# கோடை காலம் வந்தாச்சு


RBC Insurance
RBC Life Insurance Company
111 Grangeway Avenue
Scarborough, ON M1H 3E9
mahindan.mailvaganam@rbc.com
Mahindan Mailvaganam, M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance:
Home / Auto / Life /
Health / Travel /
Business / Retirement
Tel: 416-262-4973
Fax: 905-394-6048
Save an average of $695. Combine car and home plus life insurance.


பனிக்குளிரில் பட்டபாடும் போயாச்சு
உடல் மூடிக்கட்டிய உடைகளும் களைந்தாச்சு
கோடை காலமும் வந்தாச்சு கனடாவில்
பாடசாலை விடுமுறையும் விட்டாச்சு

இலை உதிர்ந்த மரங்கள் எல்லாம் தளைத்தாச்சு
சோலைகளிலும் பூமரங்கள் எல்லாம் பூத்தாச்சு
கொண்டாட்டங்களும் பல இங்கு வந்தாச்சு
கோவில்களில் கொடியும் ஏற்றி விழா எடுத்தாச்சு

புலம் பெயர்ந்து வந்த நம் மக்கள் நெஞ்சில்
புதிய யோசனைகளும் வந்தாச்சு அதில்
தாய் மண்ணை போய் பார்த்து வந்தால் என்ன
என்ற எண்ணமும் மனதில் புகுந்தாச்சு

கிறடிற் காட்டும் எடுத்தாச்சு அதை கொடுத்து
ரவல்ஸ்சில் போய் விமானச்சீட்டும் பதிந்தாச்சு
வேண்டிய உடு புடவைகள் எல்லாம் அடுக்கி வைத்தாச்சு



வங்கியில் போய் யு.எஸ். டொலரும் எடுத்தாச்சு

விமான நிலையம் போய் எல்லோரும் சேந்தாச்சு
ஒரே விமானத்தில் எல்லோரும் ஏறி இருந்தாச்சு
விமானம் மேலெழுந்து பறக்க ஆரம்பிச்சாச்சு
மறுநாள் காலை கொழும்பு போய் சேர்ந்தாச்சு

ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து மனம் குளிர்ந்தாச்சு
உறவினர்களுக்கு கொடுப்பதெல்லாம் கொடுத்தாச்சு
கையில் இருந்த பணம் முழுதும் காலியாச்சு
மீண்டும் கிறடிற் காட்டை நம்பி கனடா திரும்பியாச்சு

- கவிநாதம் பரந்தாமன் -

# GTA Square இன் கோடையில் ஓர் வசந்தம் 7 ஆவது ஆண்டு விழா

ரொறொன்ரோவில் Middlefield & Finch பகுதியில் அமைந்துள்ள GTA Square உள்ளரங்க அங்காடி ஆண்டுதோறும் நடத்திவரும் 'கோடையில் ஓர் வசந்தம்' (A Spring in Summer Festival) இருநாள் நிகழ்வு, இம்முறையும் வழமைபோல சிறப்பாக நடந்தேறியது. 7ஆவது ஆண்டாக ஆகஸ்ட் மாதத்தில் 9 & 10 ஆம் சனி, ஞாயிறு நாட்களில் மதியம் தொடங்கி இரவு 10 மணிவரை மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இம்முறை சிறுவர்களுக்கான நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அதில் குறிப்பாக Face Painting, Cake Making, Yoga பயிற்சி, தனிப்பட்டவர்களின் நடனம், ஆடல், பாடல், BBQ என பல நிகழ்வுகளை குறிப்பிடலாம். மேலும் **பாரதி ஆட்ஸ்** இன் இசைநிகழ்சியும், ***Fashion Show*** வும் மக்கள் மனதினைக் கவர்ந்தது. பெரும்பாலான மக்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்ததனைக் காணக்கூடியதாக இருந்தது. அங்காடியில் உள்ள வியாபார நிலையங்களிற்கு அதிகூடிய வியாபாரம் நடைபெற்றது. வருடாவருடம் ஓகஸ்ட் இல் வரும் இரண்டாவது சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும் இந்நிகழ்வு இலவசமாகவே மக்களுக்கு இடம்பெறுகின்றது. அடுத்த வருட நிகழ்வையும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதனை காணக்கூடியதாக இருந்தது.















*5215 Finch Ave. E., Finch & Middlefield Scarborough, ON*
*Tel.: 416.292.4400*

Parkway Mall Mobilicity Back to School SALE !!

$50 OFF COUPON

$29/mo

~~$45~~

save $16/mo. Life Time Deal. No Contract.

UNLIMITED Talk, Text & Data

FREE Long Distance

UNLIMITED Local Calling, Canada & US Long Distance

UNLIMITED Canada & International Text messaging

UNLIMITED Internet & Mobile-Hotspot

FREE Caller ID, Voice Mail, Call Waiting and more



Samsung C414 ~~$79.99~~ $0

Samsung T469 ~~$99.99~~ $0

Alcatel OneTouch Evolve ~~$199.99~~ $59.99

Nokia Lumia 521 ~~$199.99~~ $79.99

LG Optimus G2x ~~$199.99~~ $79.99

Samsung Galaxy S4 ~~$649.99~~ $369.99

No Contract !!
No Credit Check !!

PHONES $50 OFF

You can bring in your own phone

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™

# திரை விமர்சனம் - ஜிகிர்தண்டா

'பீட்சா' இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் இரண்டாவது படம்.

'தி டர்ட்டி கார்னிவல்' படத்தின் பாதிப்பில் உருவான திரைக்கதை என்பதை மறுக்க முடியாது. ஜிகிர்தண்டாவின் 'ஒன் லைன் ஸ்டோரி', தி டர்ட்டி கார்னிவல் படத்தின் கதையை ஒத்தே இருக்கிறது. கேங்ஸ்டர் களைப் பற்றி சினிமா எடுக்க ஆசைப்படும் ஒரு இயக்குநர், அவர்களைப் பற்றி நெருங்கிப் பழகி தெரிந்துகொள்ள, கேங்ஸ்டர்களைச் சந்திக்கிறார். கடைசியில் அவர்கள் வாழ்வை அப்படியே சினிமாவாக எடுத்து விடுகிறார். இதனால், கேங்ஸ்டர் களுக்கு பல சிக்கல்கள் வருகிறது. இதற்கெல்லாம் காரணம் அந்த இயக்குநர் தானே என்று, அவர்கள் இயக்குநர் மேல் கோபப்படுகிறார்கள். இயக்குநருக்கும் கேங்ஸ்டர்களுக்கும் என்ன ஆனது என்பது 'டர்ட்டி கார்னிவல்' படத்தின் இறுதிக் காட்சி. இதே கதையை தமிழ் சூழலுக்கு தக்கவாறு வேறு திசையில் இருந்து அணுகி, அங்கே தீவிரமாக இருக்கும் ஒவ்வொரு காட்சியையும் நகைச்சுவையாக கொண்டு சென்றிருக்கிறது 'ஜிகிர்தண்டா'.

ஒரு திரைப்படத்திலிருந்து பாதிப்படைந்து இன்னொரு படம் உருவாக்கும்போது, புதிய படம் முந்தையதைவிட சுவாரசியமாகவும் கச்சிதமாகவும் இருப்பதுதான் அந்த மூலப்




படத்துக்குச் செய்யும் ஆகச் சிறந்த மரியாதை. அதை மெச்சும்படி செய்திருக்கிறது 'ஜிகிர்தண்டா'. ஆனால், மூலப் படத்தின் பெயரை திரையில் சொல்லாமல் தன் சொந்தக் கற்பனையில் உதித்தது போல் செய்வதுதான் தமிழ் திரை இயக்குநர்களின் பலவீனம். கார்த்திக் சுப்புராஜும் அதற்கு பலியாகியிருக்கிறார். வெற்றிமாறன் போன்ற முந்தைய தலைமுறை இயக்குநர்கள் செய்யும் போது (ஆடுகளம்) அதனைப் பின்பற்றி கார்த்திக் சுப்புராஜும் செய்திருக்கலாம். தமிழ் திரைத்துறைக்கு இதன் மூலம் ஒரு வழிகாட்டியாக மாறியிருக்கலாம். வாய்ப்பை கோட்டை விட்டுவிட்டார். கலையில் திருட்டுதான் தவறு, பாதிப்பு தவறேயில்லை. மேலும் பாதிப்பு இல்லாமல் கலைப் படைப்புகளும் இல்லை.

மற்றபடி புத்திசாலித்தனமான வசனங்கள், காட்சிகள் என்று வித்தியாசங்களுடன் இப்படத்திலும் கார்த்திக் சுப்புராஜ் கவர்கிறார். ஆரண்யகாண்டம், பீட்சா, நேரம், சூதுகவ்வும், மூடர் கூடம் படங்கள் தமிழ் திரையில் தொடங்கி வைத்த புதிய அலைக்கு இப்படம் மேலும் வலுசேர்க்கிறது. படத்தில் முக்கியமான கதாபாத்திரம் சேதுதான். தாதாவாக மிரட்ட வேண்டும். அடியாட்களை அதட்ட வேண்டும். ஆனால், எல்லோரையும் பயப்பட வைக்கும் அதே வேளையில், கிணற்றுக்குள் ஆட்டம்போட்டு ஒரு நகைச்சுவை பாத்திரமாகவும் வெளிப்பட வேண்டும். இந்தச் சிக்கலான பாத்திரத்தை அநாயசமாக கையாள்கிறார் சேதுவாக வரும் பாபி சிம்ஹா. தியேட்டர் கழிப்பறையில் சேது என்று நினைத்து வேறொருவர் சுடப்பட, அடியாட்கள் வந்து நின்றவுடன் வேறு

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

கழிப்பறையைத் திறந்து சேது உள்ளே நுழையும் காட்சி சிம்ஹா நடிப்புக்கான சாட்சி. ரௌடிகளைப் பற்றி சினிமா எடுக்க ஆசைப்படும், நிறைய ஆர்வமும் கொஞ்சம்

**தொடர்ச்சி 33ஆம் பக்கம்**



# ANOTHER HIGHRISE CONDO PROJECT

# Islington Terrace

TRIDEL
BUILT FOR LIFE

## BLOOR & ISLINGTON

(Walking to Subway Station)





**For More Information**

## HomeLife/GTA Realty Inc. Brokerage*

## Tel: 416.321.6969

HOMELIFE
HIGHER STANDARDS

**5215 Finch Ave., E. #203, Toronto, ON.**

*Independently Owned & Operated

# ஐம்பூத வெண்பா

## கடந்த இதழ் தொடர்ச்சி

## நீர்



ஊற்றுநீர் ஆற்றுநீர் உப்புநீர் என்றுமண்
போற்றுமுன் றான புனல்மகளே - மாற்றுமன
வாயு பகவானும் வானும் கலந்துபெற்ற
நேய மகள்தானோ நீ? (9)

(என்றுமண் - என்று இந்த மண் உலகம். மாற்றுமன - காற்று, தென்றல், புயல், சூறாவளி என மாறிமாறி வீசுகின்ற மனமுடைய.)

நீயின்றி நானேது நேமிதனில் வாழ்வேது
கோயில் வழிபாடும் கூடுவதோ - ஆயகலை
கல்வி அவைதாமும் கற்கும் வழியுண்டோ
சொல்லல் அரிதுன் சுவை. (10)

(நேமி - உலகம். சுவை - நீருக்குச் சுவையில்லை. ஆயினும் நீரின் பயன்களை சுவையிலே ஏற்றிய கவிச்சுவை காண்க.)

ஆழக் கடலாவாய் ஆவியதாய் மேலெழுந்து
வீழும் மழையாவாய் வீழ்ந்தாறாய் - வாழும்
உயிர்கட்(கு) உதவும் வகையினிலே ஓடி
கயவாய் அடைவாய் களித்து. (11)

(கயவாய் - ஆறு கடலுடன் சங்கமிக்கும் இடம்.)

அருவாய் அருவுருவாய் ஆனவடி வன்றி
வருவாய் பனிக்கட்டி வண்ண - உருவாயும்
அந்தண் மகளே அறிவாயோ இப்பிறப்பில்
முந்தைப் பிறப்பின் முகம். (12)

(அருவாய் - கண்ணுக்குப் புலனாகாத ஆவியாய். அருவுருவாய் - தண்ணீராய். முகம் - வடிவம், தோற்றம்.)

சால இருப்பாய் சார்ந்து குருதியிலே
பாலில் இளநீரில் பழவகையில் - மேலும்
மருந்தாய தேனில் மதுவான கள்ளில்
விருந்தாயும் உள்ளாய் மிக. (13)

பாரில் பலநாடு நீயின்றிப் பாலைநிலம்
பாராய் பரிதாபம் நீர்ப்பாவாய் - மாரி
சிலநாட்டிற் பெய்து சிலநாட்டை வாட்டல்
நலமோ சமநீதி நாடு. (14)

பல்லுயிரும் வாழும் கடலைப் பழுதாக்கல்
நல்லநீர் ஆறுகளை நஞ்சாக்கல் - வல்ல
மனிதகுல வாழ்வை வருத்துவதாம் வஞ்ச
வினைவிட்டால் உண்டாம் விடிவு. (15)

சிவபெருமான் ஆற்றைத்தம் செஞ்சடையில் வைத்த
உவமையிலாக் காரணத்தை உற்றுக் - கவனிப்பார்
நீரின் புனிதத்தை நெஞ்சில் இருத்திக்கண்
ஆரப் புரந்திடுவ ராம். (16)

(கண் ஆர - நிறைவாக. புரந்திடுவர் - பேணிடுவர்.)

**தொடரும்...**



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

விளம்பரம் பத்திரிகையை
இணையத்தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com



# உடலின் 108 வர்மப்புள்ளிகளும் நோய்கள் நீங்கும் மர்மங்களும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *Healing and secret of the 108 preasure points*

உடலின் உள்ள வர்ம நிலைகள் ஆரோக்கியமாக இருந்தால்தான் நோயின்றி வாழலாம். இந்த வர்ம நிலைகள் சீர்குலையும்போது உடலில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. காலநிலை மாற்றமும் ஓய்வில்லாத உழைப்பும் உடலின் இயக்கத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. ஏற்கனவே மன அழுத்தம், கவலை இவற்றால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு கோடை வெப்பம் மேலும் சிக்கலை மோசமாக்கும். இந்த வர்ம புள்ளிகளில் ஏற்படும் தாக்கங்கள் பலருக்கும் புரிவதில்லை. இதற்கு மருத்துவர்களை அணுகும் போது பலவிதமான மருந்துகளைக் கொடுக்கின்றனர். நோய் பூரணமாகக் குணமடைவதில்லை. அவ்வாறு குணமடைந்தாலும் கூட உடலில் பல்வேறு உபாதைகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். இதற்கு மூலகாரணம் அந்த நோய் வருவதற்கு காரணமாக இருந்த வர்மப் புள்ளியின் பாதிப்புத்தான் என்பதை சாதாரண மருத்துவர்களால் கண்டறிய முடிவதில்லை.

நாம் ஒவ்வொரு தடவையும் சுவாசிக்கும் போது வர்மப் புள்ளிகளும் அதனை சுவாசிக்கின்றன. சுவாசத்தின் மூலம் கிடைக்கும் பிராண சக்தியானது வர்ம புள்ளிகளுக்குள் ஒடுங்கியிருக்கும் உயிர்நிலை ஓட்டத்திற்கு உந்து சக்தியாக மாறுகிறது. இந்த வகையாகத் தான் வர்மப் புள்ளிகள் (Pressure points) உடலை இயக்குகின்றன. எனவே இவற்றை சீராக



இயங்கச் செய்வதற்கு சுவாசமானது சீராக தங்கு தடையின்றி நடைபெற வேண்டும். சுவாசத்திற்கு ஆரோக்கியமான உடலும் மனமும் தேவை. அத்துடன் தகுந்த உணவுமுறை, அமைதியான வாழ்க்கை முறை இன்றியமையாதது. மேலும் சுவாச உறுப்புக்களைச் சீராக வைத்துக்கொள்ள யோகாசனம், தியானம், மூச்சுப்பயிற்சி என்பன பெரும் பங்கு வகிக்கிறது.

சித்தர்கள் அறிவால் அறிந்து சொன்ன நடைமுறை கோட்பாடுகளே வர்ம மருத்துவமாக உலகில் நிலைத்து நிற்கிறது. நோயின் மூலத்தைக் கண்டறிந்து அதனை அடியோடு அகற்றும் முறையே உலகில் மிகச் சிறந்த சிகிச்சை முறையாகும். அந்த வகையில் ஒரு நோயின் மூலம் என்பது வர்மப் புள்ளிகளின் செயல்பாட்டில் ஏற்படும் பாதிப்புகளில் இருந்தே தொடங்குகிறது. அதனைக் கண்டறிந்து உயிர்நிலை ஒடுங்கும் நரம்பு முடிச்சுகளை இயங்கச் செய்து சாதாரண நோய்கள் முதல் தீராத நோய்கள் வரை குணப்படுத்தும் முறையே வர்ம மருத்துவமாகும். இப்போது பலரும் இதன் சிறப்பை உணரத் தொடங்கியுள்ளனர். அதை விடுத்து வலி நிவாரணி மாத்திரைகளையே அடிக்கடி உபயோகித்து நோயின் தாக்கத்திலிருந்து தற்காலிகமாக விடுபட்டு தமது வாழ்நாளையே குறைத்துக் கொள்கின்றனர்.

17.5 மில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றிய பிரபஞ்சத்திலிருந்து படிப்படியாக ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக சுப்பர் நோவா (Supernova) எனப்படும் சக்தி வாய்ந்த விண்மீன் தொகுதி வெடித்துச் சிதறியதால் ஏற்பட்டதே எமது ஞாயிற்று தொகுதி (Our Solar System) ஆகும். எமது ஞாயிற்று தொகுதியில் சூரியனிலிருந்து மூன்றாவது கிரகமே பூமி ஆகும். 'உயிர்களின் தொட்டிலாக விளங்குவது புவி மட்டுமே' என்பது தற்கால அறிஞர்களின் கருத்தாகும்.

புவியின் உயிரினங்கள் யாவும் கடல் அடியிலிருந்து தோன்றியதாக நம்பப்படு கின்றது. இருநூறு கோடி வருடங்களுக்கு முன்பு பக்ரீரியா வடிவிலே உயிரினங்கள் தோன்றியிருக்க கூடும். ஒரு பக்ரீயாவில் ஆயிரக்கணக்கான ஜெனோம் (Genome) கள் உள்ளன. கடற்பாசிகள் முதல் நூற்றுக் கணக்கான உயிரினங்கள் கடலிலேயே தோன்றின. உயிரின் அத்தனை இரகசியங்களையும் ஒரு செல்லுக்குள் அடக்கி வைத்திருக்கும் அதிசயம் என்றும் எவருக்கும் புலப்படாததொன்று. எம்முடைய மூதாதையர் பக்ரீரியாக்கள் என்றால் நம்பமுடிகிறதா பாருங்கள். ஜாக் மொனைட் (Jacques Monod) என்பவர் 'ஒரு தற்செயலான காரியத்தின் விளைவுதான் உயிரினங்களின் தோற்றமாகும்' என்று கூறுகிறார். இந்த உயிரின் இரகசியத்தை புரிந்து கொண்டால் எல்லா புதிர்களுக்கும் விடை கிடைத்து விடும். விஞ்ஞானிகளும், மெஞ்ஞானிகளும் இதுபற்றி வேறு வேறான கருத்துக்களையே கூறி வருகின்றனர். இயற்கையின் தற்செயலான கூர்ப்பே உயிருக்கு ஆதாரம் என உயிரியல் விஞ்ஞானிகளும், கடவுளே உலகையும் உயிர்களையும் படைத்தார் என மெஞ்ஞானிகளும் வாதிட்டு வருகின்றனர். ஆனால் எவரும் முடிவுக்கு வந்ததாக தெரியவில்லை. மேலும் மேலும் குழப்பங்களே ஏற்படுகின்றன.

45 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஒற்றைக்கல் உயிரினங்கள், மீன்வகைகள், தாவரங்கள் என்பன ஏற்பட்டன. 85 மில்லியன் வருடங்களுக்கு முன்பு பாலூட்டிகள் காணப்பட்டன. நிலத்தில் விலங்கு இனங்கள் பெருகின. பறவைகள், யானை காண்டாமிருகம் போன்ற இனங்களும் உருப்பெற்றன. 15-20 மில்லியன் வருடங்களுக்கு முன்பு Gibbon என்ற பல குரங்கினங்கள் தோன்றின. 4-6 மில்லியன் வருடங்களுக்கு முன்பு சிம்பன்சி குரங்குகளும் வாலில்லா குரங்குகள், பொ-னாபொஸ் குரங்குகள், கொரில்லா வகைகள், உராங்உட்டான்ஸ் போன்ற பல்வேறு குரங்கினங்கள் இருந்துள்ளன. இவையும் மனித இனத்தின் முன்னோடி களாக இருந்திருக்கலாம்.

5.8 மில்லியன் வருடங்களுக்கு முன்பு ஒஸ்ராலோ பித்தகெஸ் (Australo Pithecus) என்ற மனித வடிவங்கள் இருந்துள்ளன. அதாவது இரண்டு கால்கள் கொண்ட ஆதி மனித இனமே இதுவாகும். ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியே மனித இனத்தின் ஆரம்ப இடமாக கருதப்படுகிறது. 2.2 மில்லியன் வருடங்களுக்கு முன்பு Homohabilis என்ற பெயரிலான மனித இனங்கள் காணப் பட்டுள்ளன. சாதாரண மனித மூளையில் 70 - 80 வீதம் இவர்களிடம் காணப்பட்டுள்ளது. குறைந்த உயரம் கொண்ட, குறுகிய கைகளை உடையவர்கள் இவர்களாவர். 1.9 மில்லியன் வருடங்களுக்கு முன்பு Homoerectus என்ற மனித வடிவங்கள் காணப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு, தெற்கு ஆபிரிக்கா, மேற்கு ஆசியா, கிழக்கு ஆசியாவில் இவர்கள் காணப்பட்டுள்ளனர்.



நியான்டர்தாலஸ் (Neanderthals) என்ற ஆதி மனித இனம் ஐரோப்பாவில் குறிப்பாக ஜேர்மனியில் உள்ள நியாண்டர் பள்ளத் தாக்கு பகுதிகளில் உள்ள குகைகளில் வாழ்ந்துள்ளனர். மத்திய தரை நாடுகள், பெல்ஜியம், ஐரோப்பியா ஆசிய நாடுகளிலும் இவ்வினம் இருந்துள்ளது. இவர்களும் ஆபிரிக்காவை விட்டு வடக்கு நோக்கி சென்றவர்களாகவே உளர். இந்த மனித இனம் 6-3 இலட்சம் ஆண்டுகளுக்குள் வாழ்ந்துள்ளது.

ஹேஹமோ சேபியன்ஸ் (Homosapiens) என்ற இனம் 195,000 வருடங்களுக்கு முன்பு காணப்பட்டது. Homopies என்றால் நவீன மனிதன் (Modern man) Wise man (புத்தியுள்ள மனிதன்) என்றவாறாகவே பொருள் கொள்ளப்பட்டனர். எனினும் 50 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தான் கலா-சாரம், மொழி என்பன வளம் பெற தொடங்கின.

மனித இனத்தின் பரிணாமத்தினை அறிய பல்வேறு துறையினர் ஆய்வு செய்கின்றனர். புவிச்சரிதவியல் (Paleontology) அபிவிருத்தி உயிரியில் (Develpments Biology) புவி மேற்பரப்பியல் (Morphology) மனித அமைப்பியல் (Human Anatomical), மரபியல் தரவுகள் (Genetic Datas), அகழ்வராய்ச்சிகள் (Archology), மொழிகள் (Linguistics), பரிணாம கோட்பாடுகள் (Evolutionary Theories), உளவியல் Psychology போன்ற பலவகை நிபுணர்களின் தேவை ஏற்பட்டுள்ளது. மரபுயிரணுச்சோதனை எனப்படும் பரம்பரை இரசாயன குறியீடு மிகவும் முக்கியமாக உள்ளது.

ஒவ்வொரு மனித இனமும் சில காலநிலைகள், பனிக்கொடுமை போன்ற காரணிகளால் அழிந்து போயும் உள்ளது. இந்த வகையில் நியாண்டதால் இனம் கூட அழிவுற்றுள்ளது. சகாரவில் ஏற்பட்ட பாலை நிலக் காரணிகளால் 10 மில்லியன் மக்கள் அழிந்து போயுள்ளனர். இப்படியே டைனசோர் போன்ற விலங்குகள் 1 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பனி யுகங்களால் மாண்டுபோயின. இதிலிருந்து தப்பிப்பிழைத்த மனித இனமே இன்று உயிர் வாழ்கின்றது.

மனித இனம் டாவின்சியின் (1859) பரிணாமக் கோட்பாட்டின்படி குரங்குகளில் இருந்து வந்துள்ளதாக முன்பு கருதப்பட்டுள்ளது. இதற்கு உதவ நிறமூர்த்தங்கள் DNA போன்ற கலத் தொடர்புகள் உதவியிருந்தன. ஆனால் தற்போதுள்ள விஞ்ஞானிகள் குரங்கு இனத்திற்கும், மனித இனத்திற்கும் மூதாதையினர் ஒன்றாக இருந்திருக்கலாம் என கருதுகின்றனர். காரணம் குரங்கிலிருந்து மனிதன் பரிணாமம் பெற்றிருந்தால் குரங்கினம் இல்லாது போயிருக்கும் என்ற காரணத்தினாலேயே யாகும். அமெரிக்காவின் உட்டா (Uttah) பல்கலைக்கழக புவிச்சரிதவியல் பேராசிரியர் Frank Brown என்பவர் 160,000 - 195,000 வருடங்களுக்கிடையிலான மனித அடையாளங்களையே ஆராய்ந்துள்ளார். இப்படியே 1967 இல் Leeseigal என்ற அறிஞர் அக்காலங்களுக்குரிய எலும்புகளை ஆராய்ந்துள்ளார். இதன்படி நேரடியாக குரங்கிலிருந்து மனித இனம் ஏற்படவில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் மூதாதை இனம் ஒன்று இருந்திருக்க வேண்டும் என்கின்றனர். இறைவன் படைத்த ஆதாம் ஏவாள் மூலம் மனித இனம் தோன்றியது என கிறீஸ்தவம் கூறுகிறது. மனிதனை முழுமனிதனாக இறைவன் படைத்தான்.

2 இலட்சத்துக்கு முன்புள்ள நவீன மனிதன் என கருதப்படும் Homosapiens இனத்தின் மரபுரிமையணு (DNA) மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மனித இனத்தின் தொட்டிலான கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து 4 பிரிவுகளாக நவீன இனம் பரவியுள்ளதாக ஆய்வாளர் கருதுகின்றனர். 160,000 - 135,000 வருடங்களில் இப்பிரிவுகளில் ஒன்று நன்னம்பிக்கைமுனை, தெற்மேற்கு கொங்கோ, ஐவரி கரையோரம் ஆகிய இடங்களுக்கு பரவியது. 135,000 - 115,000 வருடகாலத்தில் சகாரா ஊடாக நைல்நதி வரை இன்னொரு மனித இனம் பரவியது. 90,000 - 85,000 வருடகாலத்தில் நியாண்டதால் இனம் செங்கடல் ஊடாக அரேபியா, இந்தியாவரை பரவியது. இன்னொரு பிரிவு 85,000-75,000 வருட காலங்களில் இலங்கை, மேற்கு, இந்தோனேசியா, போர்ணியா, தெற்கு சீனா வரை பரவியது. இக்காலத்தில் ரோபோ எரிமலை வெடித்தமையாலும், 6 வருடங்களாக ஏற்பட்ட பனி யுகத்தினாலும் 10,000 க்கு மேற்பட்டோர் இறந்து போயினர்.

40,000 ஆண்டுகளில் ஐரோப்பாவின் ஆர்டிக் பகுதியிலும் 25,000 - 22,000 வருடங்களில் அமெரிக்காவிலும் பரவினர். இறுதியாக பனியுகம் ஏற்பட்ட பின்பு பல மீள் குடியேற்றங்களே ஏற்பட்டன. 18,000



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 30ஆம் பக்கம்




**BRIDAL MAKE UP**

For all your bridal makeup, other occasions make up, Upto. Saree pleating, Ironing, Much more with negotiable price.

***(With Certified Licence)***

***Contact: 416.885.0992***

**மொழிபெயர்ப்பு சேவை**

- வழக்கறிஞர்கள் அலுவலகம் (*Lawyer's Office*) • பாடசாலை (*School*)
- வைத்தியசாலை / வைத்தியர் அலுவலகம் (*Hospital / Doctor's office*)
- சமூக நல உதவி அலுவலகம் (*Social Assistant Office) (OW)*
- ஒன்ராறியோ ஊனமுற்றோர் உதவி திட்டம் (*ODSP Appointment*)
- ***Wheel Trans Interview***

பல வருட அனுபவமிக்க மொழி பெயர்ப்பாளர்களால் சேவைகள் வழங்கப்படும்.

**விஜயா குலா: 416.840.4425**

# AMMAN JOYTHIDA NILAYAM

# அம்மன் ஜோதிட நிலயம்

FAMOUS INDIAN ASTROLOGER

## Pandit Radha Krishnan

**647-308-5045 / 647-761-5544**

585 Middlefield Rd, Unit# 7, Scarborough, ON M1V 4Y5
Finch & Middlefield Beside Datta Foods







ஜோதிடம் இறைவனால் பரம்பரை பரம்பரையாக எமது குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அருங்கொடையாகும்.
இவர் கைரேகை, சாதகம், மற்றும் வழிகளில் துல்லியமாக உங்கள் வாழ்க்கையில் நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். பேய் பிசாசுகள் விரட்டி உங்கள் பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

## துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்:

- கைரேகை
- நாமநட்சத்திரம்
- கல்வி
- உத்தியோகம்
- தொழில்
- வியாபாரம் விருத்தியடைதல்
- இலட்சுமி வசீகரம்
- திருமணயோகம்
- குழந்தைப்பாக்கியம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- வாஸ்துசாத்திரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டு பயணங்கள்
- எதிரிகள்
- கண்திருஷ்டி
- கஸ்டநஸ்டங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- வாகனப் பொருத்தம்
- பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சினைகள்

ஒன்றுகூடல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள். ஏதேனும் கெட்டது இருந்தால் பரிகாரம் செய்வார். உங்கள் கதவைத்தட்டும் அதிஸ்டத்தை தவறவிட்டு விடாதீர்கள். இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்பனை பற்றி நன்கு அறிந்து வாழ்க்கையை நல்லதாக்கிகொள்ள பண்டித் அவர்களை சந்தியுங்கள்.

# மஞ்சப்பை

இது சற்று வித்தியாசமான திரைப்படமாகும். தொடக்கத்தில் நான் இது நகைச்சுவை படம் என்று நினைத்தேன். ஆனால் கடைசியில் இது சோகமாக முடிந்தாலும் கருத்துள்ள படமாக அமைந்தது.

பெற்றோர் இல்லாத பிள்ளையான தமிழ், ஒரு சிறிய கிராமத்தில் தன் தாத்தாவுடன் வளர்கிறான். அவர்களுக்கு இடையில் இருக்கும் உறவு மிக பலமானது.

அந்த பிள்ளை வளர்ந்து வேலை தேடி நகரத்திற்கு செல்கிறான். அங்கு ஒரு நல்ல வேலை கிடைக்கிறது. அந்த வேலை மூலமாக அமெரிக்கா செல்ல தமிழுக்கு வாய்ப்பு வருகிறது. இதேநேரம் அவனுக்கு காதல் ஆரம்பிக்கிறது.

இந்த நேரத்தில், தான் அமெரிக்கா போவதற்கு முன்னால் தன் தாத்தாவை நகரத்துக்கு தமிழ் அழைக்கிறான். ஊரில் வாழ்கிற தாத்தா கிராமத்திற்கும் நகரத்திற்கும் உள்ள வித்தியாசம் புரியாமல் ஊரில் வாழ்வது போல் நகரத்தில் வாழ்கிறார்.

இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. முதலில் நகைச்சுவையாக தோன்றும் நிகழ்ச்சிகள், போக போக பேரனின் வாழ்க்கையை பாதிக்க ஆரம்பிக்கின்றன.

இந்த குழப்பங்கள் என்னவென்று படத்தை பார்த்து அறியலாம், இனி இப்படத்தின் கருத்தை பார்ப்போம்.



படத்தின் விபரீதமான முடிவிற்கு யார் காரணம்?

கதையின் கதாநாயகனான தாத்தாவை குறை சொல்ல முடியாது. அவர் தனக்கு தெரிந்த மாதிரி நடக்கிறார். உண்மையில் அவர் தீய செயல் ஒன்றும் செய்யவில்லை. எல்லோருடனும் நண்பனை போல் பழகுகிறார். ஆனால் மற்றவர்களை சந்தேகத்துடன் பார்க்கிற நகர மக்களுக்கு இது சரிப்பட்டு வராது என அவருக்குத் தெரியவில்லை. Computer ஐ காணா தவருக்கு அது என்னமாதிரி இருக்கும் என்று எப்படித் தெரியும்? சொல்லித்தான் தெரிய வைக்கவேண்டும்.

கதையின் கதாநாயகியான தமிழின் காதலிக்கு தாத்தா நடக்கிற விதமும், பேசுகின்ற முறையும் பிடிக்கவில்லை. நகரத்தவரிடம் நகரப் பழக்கம் தெரியாத ஒருவர் இவ்வாறு நடந்தால் கோபிக்கத்தான் செய்வார்கள். தாத்தாவின் பழக்கத்தினால் வரும் எதிர்மறையான முடிவுகளைத்தான் அவள் காணுகிறாள். தன் காதலனுக்கு நன்மை செய்ய விரும்பித்தான் தாத்தாவை கிராமத்திற்கு அனுப்ப சொல்லுகிறார்.

கதாநாயகியை போல் தான் நகரத்தில் மற்றவர்களும் இருக்கிறார்கள். இப்படி என்றால் யாரின் மீது தவறு சொல்லலாம்?

தாத்தாவிற்கு தமிழ் விளக்கமாக நகரவாழ்வு எப்படி கிராமத்து வாழ்க்கையை விட வித்தியாசம் என கூறி இருந்திருக்கலாம். மற்றவர்களுக்கு தாத்தா எல்லாவற்றையும் என்ன நோக்கத்துடன் செய்ய நினைக்கிறார் என்று விளங்கப்படுத்தி இருக்கலாம். தாத்தாவிற்கு Computer என்றால் என்ன, விலை கூடின பொருட்கள் எவை என்று காட்டி இருக்கலாம் இவ்வளவும் செய்யக் கூடிய ஒரே ஒருவர் பேரனான தமிழ் தான். பேரன் இவ்வாறு செய்திருந்தால் பிரச்சினையும் எதுவும் வந்திருக்காது. எனவே படத்தின் சோக முடிவிற்கு பேரனே காரணம்.

இப்படத்தில் வரும் 'அன்புதான் இருக்கையில்' என்னும் பாட்டில் மிக நல்ல வசனங்கள் உள்ளன. உதாரணத்திற்கு **'வேதனையை வீசி விடு வெற்றி உன்னை தேடி வரும்'** என அறிவுரை வழங்கப்படுகிறது.



**ஞா. ஆரணி**
**அகவை 16**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# திரை விமர்சனம்...

21ஆம் பக்கத்தொடர்ச்சி


பயமும் கலந்த இயக்குநர் பாத்திரத்தில் வருகிறார் சித்தார்த். கச்சிதமான பொருத்தம். மென்மையான சித்தார்த், தாதா போல் இறுதிக்காட்சியில் விஜய் சேதுபதியை மிரட்டுவது எதிர்பார்க்காத மாற்றம்.

கதாநாயகி லட்சுமி மேனன். கதைப்படி அவ்வளவு முக்கியத்துவம் இல்லாத பாத்திரம். எனவே, அவ்வளவாக காட்சிகளும் இல்லை. ஆனால், வசீகரமாக இருக்கிறார். ரசிகர்களை தியேட்டருக்கு வரவைக்க இவர் அவசியம். சிறிது நேரமே வந்தாலும் நாசரும் விஜய் சேதுபதியும் ரசிக்க வைக்கிறார்கள். நடிப்புச் சொல்லித் தரும் ஆசிரியராக வரும் சோமசுந்தரம் நடிப்பு கலக்கல். சித்தார்த்தின் நண்பராக வந்து பயந்து பயந்து சாகும் கருணாகரனும் பிட் படம் பார்ப்பவரும் ரசிக்க வைக்கிறார்கள். அம்பிகாவின் பாத்திரம் 'அவன் இவன்' பாத்திரத்தை நினைவூட்டுகிறது.

நெருக்கமான மதுரை தெருக்களையும் சின்ன அறைகளிலே நடக்கும் காட்சிகளையும் அழகாகவும் தெளிவாகவும் படம் பிடித்துக் காட்டயிருக்கிறார் கேவ்மிக். சந்தோஷ் நாரா யணன் பின்னணி இசையிலும் பாடல்களிலும் வழக்கம்போல் படத்திற்கு வலுவூட்டுகிறார். மதுரை தாதா கதை என்பதால் அரிவாளும் ரத்தமுமாகவே இருக்கும் என்று நினைத்தால் நீங்கள் ஏமாந்துபோவீர்கள். அதுதான் ஜிகர்தண்டாவின் பலமும்கூட.



ஜிகிர்தண்டா - பெயருக்கேற்ற சுவை.

# இலங்கை செல்கிறீர்களா?

உங்களுக்கு தேவையான போக்குவரத்து, தங்குமிட வசதிகளை நாங்கள் ஒழுங்கு செய்து தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு: 416.459.7519**



# Education

## Answer Key : 14-14

**CHEMISTRY 12**

(i) Bond angles

A) $H_3C—CHO$ B) $CH_3NHC_2H_5$ C) $PCl_5$

A) 109.5°, 120°
B) 109.5°, 107°
C) 120°, 90°

(ii) polar bond

(a) $HSCH_2CH_2OH$ : O-H
(b) $CHCl_2F$ : C- F

**BIOLOGY 12**


Proteins are polymers of aminoacids.

Aminoacids linked together by peptide bonds form polypeptide chain.

One or more polypeptide chains twisted into a 3D shape form protein.

Folding of proteins happens spontaneously. Proteins have complex shapes that include various folds, loops, and curves.

proteins may exhibit one or more of four types of protein structure. These structure types are called primary, secondary, tertiary, and quaternary structure.




Adapted from wikimedia

## Review Questions14 -15

**CHEMISTRY Gr 11 & IB**

A 1.35 g sample of pure Al reacts with excess HCl, and the liberated $H_2$ is collected over water at 30°C. The barometric pressure =755mmHg. What volume of gaseous mixture , in litres, is collected? SVP ($H_2O$) at 30°C=31.5 mmHg.

➢ **MATH GR 10**

A plane flew from Florida, USA to London, UK. The return flight took 1 hour more than it took to fly to London. The difference in flight time was due to the winds and the wind speed was 100 km/h. If there was no wind factor on the flight to London, determine the average speed of the plane in still air. Assume the average distance between the two airports 7000 km.

➢ **MATH GR 11**

It takes Kevin and Jude the same amount of time to fill a box with 200 apples. However, their friend John takes 2 more minutes than Kevin and Jude to fill the box with the same number of apples.

Kevin , Jude and John fill 2 boxes of apples in 5 minutes. How long does it take each of them to fill one box of apple.

➢ **IB & 11 Biology**

Heart rate of person decreases as his/her fitness increases. Give a reason.

Ans. key 14-15 - next issue
☎ 647 341 3975
Dr. K.A.Srikrishnaraj
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# மனித இனத்தின்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

நாகரிக முதல்வர்கள் இவர்களே.

மொசப்பத்தேமியாவில் தோன்றிய இன்னோர் நாகரிகம் பலிலோனிய நாகரிகம் ஆகும். இதுவும் வானியல், மருத்துவ நாகரிங்களை தந்துள்ளன. அழகான பெரிய கட்டிடங்கள் நிறுவப்பட்டன. அடுத்து சிறப்புபெற்ற நாகரிம் கிரேக்கமாகும். கவிஞர்கள், தத்துவஞானிகள் இங்கு வாழ்ந்துள்ளனர். மதம், கடவுள், மொழி அனைத்தும் செழிப்பு பெற்றன. 'இலியட்', 'ஒடிசி' என்ற காப்பியங்கள் உலகப் புகழ்பெற்றவை. கிரேக்கத்தில் பல்வேறு ஆட்சிகள் இருந்துள்ளன. ஏதென்ஸ் புகழ்பெற்ற நகராக இருந்தது. ஆர்க்கிமிடிஸ், சாக்கிரட்டீஸ் (கி.மு 470), பிளேட்டோ, அரிஸ்டோட்டில், மகாஅலெச்சாண்டர் (கி.மு 356 - 323) கிரேக்கத்தின் புகழை என்றும் வாழவைப்பர்.

ரோமானிய நாகரிகம் கி.மு753 இல் உருவானது. ரோமோனியர்கள் கிரேக்கர் வசம் இருந்த இத்தாலியை கைப்பற்றினர். பல்வேறு போர்களில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். அடிமைகளை கொண்டு வந்தனர். யூலியஸ் சீசர் புகழ் பெற்றிருந்தார். இதேவேளையில் மொழிகள் பற்றி ஆராய்ந்தால் முதல்முதல் எழுத்துக்களை வடிவமைத்தவர்கள் மொரீசியர் ஆவர். சிரியாவில் வாழ்ந்த இவர்கள் கடல் வணிகம் செய்து வந்தனர். இவர்களிடமிருந்து கிரேக்கர் எழுத்தைக் கற்று கொண்டு ரோமானியருக்கு கற்றுக் கொடுத்தனர். லத்தீன் மொழியில் இருந்து ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஐரோப்பிய மொழிகள் பிறந்தன.



இந்தியாவில் எப்படி எழுத்துக்கள் உருவாகின என்பதே பெரும் ஆய்வுக்குரியதொன்று. ஆரிய மொழிக்குடும்பத்தில் எழுந்த சமஸ்கிருதம் இப்போது அழிந்து விட்டது. திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழே முதல்மொழி என சுவாமி ஞானப்பிரகாசரும், தேவநேயபாணரும் கூறினர். இதே வேளையில் இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் மிகவும் பழமை வாய்ந்தது. அமெரிக்க ஆய்வாளர் அலெக்ஸ் கொலியர் என்பவர் 'உலகின் வலிமையான மொழி தமிழ், உலகின் முதல்மொழி தமிழ்' என்று கூறி வருகிறார். சிந்துவெளியில் மொகஞ்சதாரோ, ஹரப்பா (Harapa) நாகரிகம் கி.மு 2,600 -1,900 ஆண்டுப் பழமை வாய்ந்தது. இந்து சமயத்திற்குரிய கடவுளர்களின் ஆதாரங்கள் உள. யூகட்டான் (Yucatan) குடாநாட்டில் மாயா நாகரிகம், சீனாவில் Jiahu கலாசாரம், பாகிஸ்தானில் நியோலித் நகரிகம் மிக பழமை வாய்ந்தவை. கி.மு 1500 இல் வேதங்கள் ஏற்பட்டன. படிப்படியாக

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH, FRENCH
Individual & Small Group classes, Individual care
GR 1- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
SPECIAL CLASSES FOR
❖ PRE-UNIVERSITY
• MCAT EXAM
✦ IB & AP program
• SUMMER CLASSES
"July- August"
❖ REGULAR CLASSES
"Throughout the year"
சிறந்த தெரிவு

# நண்பனைக் காணவேண்டும்

## சிறுகதை

ஒரு ஒற்றையடிப்பாதை, பாதையின் இருமருங்கிலும் மலைச்சாரல் போல பச்சைப்பசேல் எனக்காட்சியளிக்கும் உயர்ந்த மண்மேடுகள். வீதி எங்கிலும் ஒரே நிஷப்தம். காரணம் அது மாரிகாலம். மடைக்கதவுகள் திறக்கப்பட்டது போல பொழியும் மழைக்கு மண்மேடுகள் ஈடுகொடுக்க முடியாது சரிந்து விழும் காலம் இது. இந்த ஒற்றையடிப்பாதையும் அதற்கு விதிவிலக்கல்ல. மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு அப்பாதையை அண்டி வாழும் மக்களையும் பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாலைவேளை கதிரவன் தன் வீடு செல்ல ரோகினிகள் மெல்ல கண் சிமிட்டும் வேளை, ஆனால் அங்கு மழை முகில்கள் வானை மூடிக்கொள்ள பனிப்புகார் வீதியெங்கும் வெள்ளைத் திரைசீலை போல் மூடிக் கொண்டது. அசைவற்று மூடிக்கிடந்த அந்த திரை சீலையை கிழித்துக் கொண்டு ஓர் உருவம் வருவது தெரிந்தது. நிலவிய நிஷப்தத்தையும் குலைத்துக் கொண்டு கால்கள் மண்ணைக்கீறி பெருவொலி எழுப்பியவாறு அவ்வுருவம் முன்னோக்கி வந்தது. அவனுக்கு அருகே வெறும் மரம், செடிகளே. அவையும் குளிரில் அசைவற்று துவண்டு கிடந்தன. ஆனால் அவன் யாருடனோ அதட்டிப்பேசிக்கொண்டே வருகிறான். இல்லை இல்லை அவன் தன்னைத்தானே அதட்டிக்கொள்கிறான்.

"நான் என்ன காரியம் செய்திருக்கேன்? கொஞ்சமும் யோசிக்காம செய்திட்டனே, அவன்தான் புரியாமல் செய்தான் என்றால் நானும் ஏன் இன்னைக்கு இப்படி ரொம்ப மோசமா நடந்துகிட்டேன்? அவனை இப்பவே பார்த்து அவன்கிட்ட மன்னிப்பு கேட்டுட்டு அவன் கேட்டதை அவன்கிட்டேயே குடுத்திட்டு வந்திடனும்" என்று உள்ளம் பேச அதைக்கேட்ட கால்களும் மெல்ல நடையை விரைவுபடுத்தவே மழையும் தன்னை விரைவு படுத்திக்கொண்டு பூலோகம் வந்திறங்கியது. யோசனையில் அலைமோதிக் கொண்டிருந்த அந்தப்பையன் கறுப்பனின் கண்கள் மழைக்காட்சியின் மங்கலுக்குள் ஊடுருவி திடீரென ஓரிடத்தில் நிலைக்குத்தியது. தலைகளில் துண்டுகளையும், தேயிலை கொய்யும் கூடைகளையும் பிடித்துக்கொண்டு மக்கள் கூட்டம் ஓரிடத்தில் ஆரவரித்து கொண்டிருப்பதை கண்டான்.

"ஓஹோ! நேற்று நம்ம ஊருக்கு யாரோ பெரிய வித்துவான் வந்திருக்காராம்ல அவரோட பிரசன்னம் தான் இந்தப்பாதையில இப்படி ஒன்னும் தெரியாத பாமர மக்களை மழையிலை நிக்க வச்சிருக்குப்போல" என்று தனக்குள் ஏளனமாக நினைத்துக் கொண்டே கறுப்பன் ஒரு மணி நேரத்துக்கு முன்பு நடந்ததை அசைபோட ஆரம்பித்தான்.

கறுப்பனும் அவனுடைய நண்பன் நாடனும் இணைந்து, சுமார் இரு மாதங்களுக்கு முன்பு ஒரு வியாபாரத்திறன் காணும் போட்டி ஒன்றில் பங்கேற்றனர். கறுப்பனின் அறிவும் நாடனின் ஊக்கமும் அந்தப்போட்டியில் முதலிடம் ஜெயிக்கக் காரணமாயிற்று போட்டியில் பங்கேற்றது இருவருமாக இருந்தாலும் அதில் அதிக ஊக்கம் எடுத்திருந்தது என்னவோ நாடன் தான்.

காரணம் முதலிடப் பரிசாக ஐந்து ஏக்கர் நிலம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டமையே ஆகும். ஏனெனில், அவன் சிறிய சைக்கிள் கடையொன்றை நடத்தி வருபவன். சைக்கிள் கடையில் தொழில் என்பதாலோ கடவுள் அவனுக்கென்று கொடுத்த ஒரே சொத்து உக்கியதொரு சைக்கிள் தான். அதேபோல ஒரே நண்பன் கறுப்பு தான்.

தான் செய்யும் சிறு தொழிலில் இருந்து படிப்படியாக உயர முழு முயற்சி எடுப்பவன் நாடன். தற்போதிருக்கும் வாடகைக் கடையிலிருந்து தனக்கென சொந்தமான ஒரு சைக்கிள் கடை நடத்துவதற்கு மூலதனமாக அந்த நிலத்தை எப்படியும் அடைந்துவிட வேண்டுமென எண்ணி தனக்குள் வைராக்கியம் கொண்டிருந்தான். அதேபோல் கறுப்பன் படித்த படிப்பிற்கு ஏற்ற தொழில் இல்லாவிட்டாலும் சாதாரண குடும்பத்திற்கு போதுமான வருமானத்தை ஈட்டிக் கொள்கிறான். நாடனுக்கு நல்ல நண்பனாக மட்டுமல்லாது ஏற்ற வேளைகளில் பண உதவிகளும் கறுப்பன் செய்து கொடுப்பது வழக்கம்.

இருப்பினும், கறுப்பனும் இப்போட்டியில் பங்கேற்றதற்கு ஒரு காரணமுண்டு அதென்ன வெனில், வீடு கட்டுவதைத் தொழிலாகக் கொண்ட அவன் தனக்கென ஒரு சொந்த வீட்டைக் கட்டுவதற்கு நிலமொன்றை வாங்க அவன் பல வருடங்களாக தனக்குள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தான்.

இதனிமித்தமே இந்தப் போட்டியில் இருவரும் பங்கேற்றனர். சற்று நேரத்துக்கு முன்பு அந்தப் பரிசு இருவருக்கும் கிடைக்கப் பெற்றது என அறிவிக்கும் கடிதம் வந்தது.

வாய்ப்புக்கள் வந்தால் தாயும் சேயை மறக்கும் கலியுக காலமிது. இந்த நண்பர்களுக்கு இடையிலும் அக்கடிதத்தைக் கண்டவுடன் இருவரில் நிலத்தை யார் எடுத்துக்கொள்வது என்ற ஐயம் உடனே வெடித்து பெரும் வாக்குவாதமாக மாறியது. நாடனின் சைக்கிள் கடை வாசலில் வாக்கு வாதம் கைகலப்பாக மாறியது. கறுப்பனுக்கு கோபமும், நாடனை விடவும் தான் சிறிது கற்றவன் என்ற அகங்காரமும் உச்சத்தைத் தொடவே செய்வதறியாது மதம் பிடித்த யானை போல் சுற்றும் முற்றும் பார்க்கையில் அவன் கைகளில் சைக்கிள் ஒன்று அகப்பட்டது. தனக்குள் இருக்கும் கோபத்தை எப்படியாவது நாடனிடம் காட்டி விட வேண்டும் என்று எண்ணிய கறுப்பன், யானையொன்று யுத்தகளத்திலே தன் பகைவர்களை துதிக்கையால் தூக்கி வாரிப் போடுவதைப்போல அகப்பட்ட சைக்கிளை இறுகப் பற்றித்தூக்கி வீசி எறிந்து தன் அகோர கோபத்தை வெளிப்படுத்திவிட்டு அக்கடிதத்தையும் தன்னுடன் கொண்டு அங்கிருந்து விரைந்து செல்லலானான்.

சிறு வயதிலிருந்தே சைக்கிள்களை மாத்திரம் தன் குடும்பமாக எண்ணி வாழும் நாடனுக்கு அந்த அடி உடலையே ஒரு நொடி உலுக்கியது. இருப்பினும் பொறுமை சாலியான நாடன் தன்னை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு "சரி கறுப்பன் எனக்காக இதுவரைக்கும் எத்தனையோ பண உதவிகள் மட்டுமில்லாம நிறைய வேளை களில் எனக்கு எவ்வளவு பக்க பலமாக இருந்திருக்கான். ஆகையால் நான் சண்டை யிட்டுக்கொள்ளாது அவனுக்கே விட்டுக் கொடுத்திடலாம், அதோட அவன் என் பங்குக்கு தர இருக்கும் பணத்தில எதாவது செஞ்சுக்கலாம்'' என தன் இதயத்தை ஆற்றியவனாய் கனிந்த பார்வையில் கறுப்பனை பார்த்த வண்ணம் நின்றான்.

அந்தப்பார்வை தான் உக்கிர தாண்டவம் ஆடிச்சென்ற கறுப்பனையும் மன்னிப்புக் கேட்க மீள அழைத்துள்ளது. ஆம் கறுப்பன் நாடனிடம் மன்னிப்பு கேட்கத்தான் இப்பொழுது நாடனின் கடைக்கு திரும்பி வந்திருக்கிறான்.

நாடன் கறுப்பனுடன் சிறு சிறு சண்டைகள் பிடித்துவிட்டால் கடையை மூடிவிட்டு வீடு சென்றுவிடுவது வழக்கம் அதுபோல இன்றும் சென்றுவிட்டான். ஏமாற்றம் தான் இருந்தாலும் நாடனின் வீட்டிற்குச்சென்றாவது அந்தக் கடிதத்தை அவனிடம் கொடுத்துவிட வேண்டும் என அடை மழையிலும் கறுப்பு மீண்டும் நாடனின் வீடு நோக்கி செல்லலான-ான். மழை ஓயத்தொடங்கவே மக்களின் அகோர கூக்குரல் வானைத் தொடுமளவிற்கு சற்று சற்றாக மேலோங்கியது. சத்தம் கேட்ட கறுப்பு கூச்சல்கள் கேட்குமிடத்தை நோக்கி விரைந்தான்.

அது அவன் வரும்போதே கண்ட காட்சிதான். அதேபாதை, அதே பாமர மக்கள். ஆனால் இப்பொழுது தான் அக் காட்சியின் காரசாரம் அவனுக்கு புலப்பட்டது. அவன் வருகையில் குழுமியிருந்த மக்கள் அவ்வூருக்கு வந்த மகா வித்துவானை காணவல்ல, அந்த இடத்தில் பொழிந்த மழையால் ஏற்பட்ட மண்சரிவைக் காணவே அங்கு நின்றிருந்தனர். ஆனால் கறுப்பு சென்று மீண்டும் அவ்விடம் வருவதற்குள் நிலைமையே மாறிவிட்டது. அவன் நின்ற இடத்தில், மழையால் பெருகிய சகதி வெள்ளத்திற்குப் பதிலாக இரத்த வெள்ளமே பெருகியிருந்தது. என்ன நடந்திருக்கும் என கறுப்பனின் உள்ளம் தத்தளிக்க அவன் காதுகளில் மெல்ல மெல்ல பொதுமக்களின் பேச்சொலி விழ ஆரம்பித்தது.

"டேய் மாடசாமி என்னடா நடந்திச்சு ?"

"யாரோ சைக்கிளை வேகமா ஓட்டிக்கொண்டு வந்து இந்த மண் மேட்டை மோதிருக்கான், பெரிய மழைக்கு சரிஞ்சிடும்னு எதிர்பார்த்த மண்மேடு சரிந்து விழுந்து அவன்ட உயிரையும் குடிச்சிட்டுது அண்ணே!"

இப்படி உரையாடல் தொடர்கையில் கூட்டத்தின் முன்பிருந்த ஒருவன் ஏதோ புலம்பிக்கொண்டு ஓடிவந்தான்.

"ஐயோ, அண்ணே அப்படிச் சிக்கி செத்தவன் வேறயாருமில்ல நம்ம நாடன் தம்பிதான் அண்ணே. போகும்போது கூட என்னப் பார்த்து கதைச்சவன், கறுப்புத் தம்பியத்தான் பாரக்கப்போறதா சொன்னான் அண்ணே. மழை இருட்டில தெரியாம மோதிப்போட்டு இப்படி செத்துக்கிடக்கிறான் அண்ணே" என்று பேரிரைச்சல் போன்ற குரலில் கத்திப்புலம்பினான்.

அவ்வளவு தான், இத்தனை நேரமும் ஊரார் பேசக் கேட்டிருந்த கறுப்பனின் காதுகள் மெல்ல மெல்ல அடைக்கத்தொடங்கியது. தொடர்ந்து தொண்டை வறள, கால்களும் வலுவிழந்து அப்படியே கறுப்பன் கீழே விழுந்தான். உடல் முழுவதும் சட்டென்று மௌனித்திருந்த போதும் கறுப்பனின் உள்ளம் தனக்குள் ஏதோ அங்கலாய்க்கத் தொடங்கியது.


அது வேறெதுவுமில்லை, சிறிது நேரத்திற்கு முன் கறுப்பு நாடனின் கடையில் தூக்கி வீசிய சைக்கிள் பழுது பார்க்க கடையில் வைத்திருந்த சைக்கிள் அல்ல. அது நாடனி ன் சைக்கிள் தான். கறுப்பு தூக்கிப் போட்ட பொழுது அதன் ஒரு சில்லில் ஏதோவொரு கோளாறு ஏற்பட்டது. அதனைக் கவனியாது நாடன் சைக்கிளை ஓட்டி வந்திருக்கிறான். மழையிலிருந்து தப்பி செல்ல நாடன் வண்டியை விரைவாக முடுக்கியதும் சைக்கிள் சில்லு கழர வண்டி கட்டுப்பாட்டை இழந்து மண்மேட்டை மோதியது. அந்தக் கணம் மழையும் பொழிய மண் மேடு சர சர வென சரிந்து நாடனை மூடிக்கொண்டது. சம்பவம் அறிந்து ஊரார் வந்து காப்பாற்றுவதற்குள் நாடன் இவ்வுலகை விட்டு சென்றுவிட்டான்... என்ற மறுக்க முடியாத உண்மையைத்தான் கறுப்பனின் உள்ளம் அங்கலாய்த்தது.

அன்று தன் பிழையை உணர்ந்து மூர்ச்சையடைந்து கீழே விழுந்த கறுப்பு திரும்ப மீள நினைவு பெறவில்லை. ஆனால் குற்ற உணர்வுடன் போராடும் கறுப்பனின் ஆத்மா ஏங்குவது நாடனிடம் மன்னிப்புக் கேட்கத்தான்.

தன் "நண்பனைக் காண வேண்டும்'' என்ற ஆசை மண்ணுலகில் ஏமாற்றத்தை கொடுத்து விட்டாலும் விண்ணுலகிலேனும் இனி கிட்டட்டும்.

வாழ்வில் சில நொடிகள் நாம் வெளிப்படுத்தும் சில உணர்வுகள் நமக்குத் தெரியாமலே இத்தகைய பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தி விடுவதும் உண்டு.

- ஜயந்தா பிரேம்குமார் -
அகவை 16



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND ®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

## UFO's & Aliens

### அறிமுகம்

1947ம் ஆண்டு, யூன் 30ம் திகதி.

நேரம் பகல் 3 மணியைத் தாண்டிச் சில நிமிடங்களே ஆகியிருந்தது. கெனத் ஆர்னோல்ட் (Kenneth Arnold) என்ற அமெரிக்க விமானி வோசிங்ரன் பகுதியில், செகலிஸ் இருந்து யகிமா விற்குப் Call Air A-2 என்ற தனது விமானத்தில் பறந்து கொண்டிருந்தார். தனிப்பட்ட விமான சேவையின் விமானியான இவர், றேயினியர் (Rainier) என்ற மலைப்பகுதியில், விபத்தில் சிக்கிய சரக்கு விமானம் ஒன்றினைத் தேடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பல மணித்தியாலங்களாகத் தேடியும், விபத்துக்குள்ளான விமானத்தை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால், தன் முயற்சியைக் கைவிட்டு விட்டு யகிமாவிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திடீரென இவரது விமானத்தின் முன்னால் தோன்றிய வலிமையான வெளிச்சத் தெறிப்பு ஒன்று, இவரது கண்களைக் கூசவைத்துச் சென்றது. ஒரு கண்ணாடியில் கதிரவ வெளிச்சம் பட்டுத் தெறிப்பது போல அவ்வெளிச்சம் இருந்தது. ஆர்னோல்ட் பயந்து விட்டார். அருகில் ஏதாவது விமானம் வருகிறதோ? தனது விமானத்துடன் மோதப் போகிறதோ? எனப் பயந்தவர், தனது விமானத்தின் சுற்றிலுமாக ஏதாவது விமானம் வருகிறதா என ஸ்கான் பண்ணிப் பார்த்த போது அப்படி ஒன்றுமே இல்லை. அவரது விமானத்திற்குப் பின்புறமாக 24 மைல் தூரத்தில்தான் ஒரு விமானம் பறப்பதாக, ஸ்கானர் தனது திரையில் காட்டியது. அவ்வேளையில் றேயினியர் மலையில் இருந்து 20 அல்லது 25 மைல் தூரத்தில், தரையில் இருந்து 9200 அடி உயரத்தில் இவரது விமானம் பறந்து கொண்டிருந்தது. 30 செக்கன்கள் கழிந்திருக்கும், இவரது விமானத்திற்கு இடது புறமாக, அதாவது வடக்குத் திசையில் ஒன்பது பிரகாசமான பொருட்கள் பறப்பதை ஆர்னோல் கண்டார். ஏதாவது ஒளி மயக்கமாக இருக்கலாமென எண்ணியவர் விமானத்தின் கண்ணாடிகளை துடைத்துக் கூர்மையாகப் பார்த்த போது அந்த ஒன்பது பொருட்களும் தெளிவாகத் தெரிந்தன. எட்டுப் பொருட்கள் கீழ்ப்புறம் தட்டையாக இருக்க, மேற்புறம் குவிந்து வளைந்து காணப்பட்டன. ஒன்பதாவது பொருள் மட்டும் பிறை வடிவிற் தென்பட்டது. ஒரு நீண்ட வரிசையில் படுவேகமாகப் பறந்து சென்ற அப்பொருட்கள், றெயினியர் மலைக்கு அப்பாற் சென்று மறைந்து விட்டன.

விமானியான அவர் அந்த ஒன்பது வெளிச்சங்களும் சென்ற வேகத்தினைக் கண்டு பிரமித்துப் போய்விட்டார். அந்த வெளிச்சங்களின் வேகம் சுமாராக மணிக்கு 1700 மைல்களாகவாவது இருக்கும் என்று கணித்துக் கொண்டார். அக்காலத்தில் வேகமாகப் பறக்கக் கூடிய விமானத்தின் வேகத்தையும் விட அவ்வேகமானது மூன்று மடங்குகளிலும் அதிகமானதாக இருந்தது. அவை என்னவாக இருக்கும் என ஆர்னோல்ட் தனக்குள் கேட்டுக் கொண்டார். அவ்வளவு வேகமாகச் சென்ற அவை, சாதாரண பறவைகளாக இருக்க முடியாது என அவரது மனம் கூறிக் கொண்டது. மேலும் அவை பறந்த உயரம், நிச்சயமாக அவை பறவைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தியது. சாதாரணமான விமானங்களாகவும் அவை இருக்கமுடியாது எனவும் ஆர்னோல்டின் மனம் உறுதியாகக் கூறிக் கொண்டது. இதே சிந்தனையுடன் பறந்து, தரையை வந்தடைந்த ஆர்னோல்ட், இந்த விசித்திர அனுபவத்தைத் தனது சகபாடிகளுடன் பகிர்ந்து கொண்டார். மறுநாள், பத்திரிகைகளுக்கு, தான் கண்டதைக் கூறினார். தான் அப்படிக் கூறியது எவ்வளவு பெரிய திருப்பத்தினை மக்களிடையே ஏற்படுத்தப் போகிறது என்று அவர் அப்போது அறிந்திருக்கமாட்டார். சர்வ சாதாரணமாகவே அவர் பத்திரிகை நிருபர்களிடம் தனது நம்பமுடியாத அனுபவத்தினைக் கூறியிருந்தார். அசோசியேட் பிரஸ் (Associate Press) என்ற பத்திரிகையின் நிருபர் இவரது விளக்கத்தினை வைத்துக் கொண்டு, கெனத் ஆர்னோல்ட் வானில் கண்டவை, பறக்கும் தட்டுக்கள் (flying




saucers) எனப் பத்திரிகையில் எழுதிவிட, மக்களிடையே ஒருவித பரபரப்பு ஏற்படலாயிற்று. உலகெங்கிலும் பறக்கும் தட்டுகள் என்ற பதமொன்று புதிதாகத் தோன்றிப் பிரபலமாகிவிட்டது. ஏறக்குறைய நூற்றி ஐம்பது செய்தித்தாள்களில் இந்தப் பறக்கும் தட்டுகள் என்ற விடயம் அப்பொழுது வெளி வந்தது எனக் கூறுகின்றார்கள்.

அன்றில் இருந்து உலகின் பல பாகங்களிலும் இந்தப் பறக்கும் தட்டுகள் என்ற விடயம் பரபரப்பாகவும், ஆச்சரியமாகவும் பேசப்படத் தொடங்கிவிட்டது. ஆய்வாளர்கள் ஆர்னோல்டைச் சும்மா விடவில்லை. அவரைக் கேள்விகளின் மேல் கேள்விகள் கேட்டு துளைத்து தெடுத்து விட்டார்கள். ஆர்னோல்டின் விடயமானது பல ஆய்வாளர்களினால் தீவிர ஆய்வுக்குள்ளாக்கப்பட்டு பலவகையான முடிவுகள் பெறப்பட்டன. பெரும்பாலானவர்களின் முடிவு ஆர்னோல்ட் அன்று வான்பரப்பில் கண்டவை பறக்கும் தட்டுகள் இல்லை என்பதாக இருந்தது. ஆனாலும் ஆர்னோல்ட் வானிலே கண்டவற்றை இன்னதுதான் என அவர்களால் சரியாகக் கூறவும் முடியாதிருந்தது. இதேநேரம், தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத இன்னொருவரும் இந்த ஒன்பது வெளிச்சங்களைத் தானும் கண்டதாகக் கூறினார். இதைத் தொடர்ந்து வேறு பலரும் தாமும் வானிலே பறக்கும் தட்டுகளைக் கண்டோம் எனக் கூறிப் பதிவுகளைப் பல நாடுகளிலும் செய்ய, பறக்கும் தட்டுகள் விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. உலகின் பல நாடுகளும் இந்த விடயம் பற்றிப் பெரிய பெரிய ஆய்வுகளையும், விசாரணைகளையும் செய்யத் தொடங்கின. அமெரிக்கரோ, இதற்கென, புளூ ஃபைல் (blue file) எனும் விசாரணைக் கோவையையே பிரத்தியேகமாகப் பாவிக்கத் தொடங்கிவிட்டனர்.

பறக்கும் தட்டுகள் பற்றி ஆர்னோல்டிற்கு முன்னரும் சிலர் பரபரப்புடன் பதிவு செய்திருந்த போதிலும் கூட, கெனத் ஆர்னோல்டின் விவகாரமே பறக்கும் தட்டுகளின் விவகாரத்திற்கு உண்மையான ஆரம்பம் எனலாம். ஏனெனில் உலகம் முழுவதுமே இவ்விவகாரம் பற்றி கதைத்தது, அறிந்து கொள்ள ஆசைப்பட்டது எல்லாம் ஆர்னோல்டின் சம்பவத்தின் பின்னர்தான். உத்தியோகபூர்வமாக, ஆர்னோல்ட் கண்டது பறக்கும் தட்டுகள் இல்லை எனக் காட்டப்பட்ட (?) போதிலும், சிலர் அம்முடிவினை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் ஆர்னோல்ட் கண்டவை பறக்கும் தட்டுகளேதான் எனத் திரும்பத் திரும்ப உறுதியாகக் கூறிக்கொண்டே இருக்க, பறக்கும் தட்டுகள் என்ற பதத்தினை உலக மக்களிடமிருந்து இல்லாமற் பண்ண முடியாது போய்விட்டது. ஆர்னோல்ட் கூட தான் கண்டவை பறக்கும் தட்டுகள்தான் என்பதில் இருந்து எள்ளளவும் மாற்றுக் கருத்தினைக் கொள்ளவில்லை. அவற்றினைக் கண்ட எனக்குத்தான் அவை என்னவென்று தெரியும் என்பதுபோல் இருந்தது அவரது கூற்று.

சரி அடுத்த தடவையில் மீதியைப் பார்ப்போம்


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




# மனித இனத்தின்...


34ஆம் பக்கத்தொடர்ச்சி

பௌத்தமதம் (கி.மு 563 இல்) இஸ்லாமிய சமயம் (கி.பி 6ஆம் நூற்றாண்டு), யேசு கிறிஸ்துவுக்கு கிறீஸ்தவம் எல்லாமே பிரதான மதங்களாகின. உலகில் 175 கோடி கிறீஸ்தவர்கள் வாழ்கின்றனர்.

450 கோடி வருடங்களுக்கு முன் தோன்றிய பூமி மிகவும் வெப்பமாக இருந்தது. அது படிப்படியாக தணிவதற்கு 60 ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து மழை கொட்டியது. கடல்கள் தோன்றின. கண்டங்கள் நகர்ந்தன. 150 கோடி வருடங்களுக்கு முன்பு பக்ரீரியாவும், கடல் பாசியும் உயிரணுவை பிறப்பித்தன. 35 கோடி வருடங்களுக்கு முன்பு தரையில் நகர்ந்து செல்லும் பிராணிகள் தோன்றின. படிப்படியாக குரங்கினங்கள் உருப்பெற்றன. தொடர்ந்து இரண்டு கால்களுள்ள மனித இனம் கிழக்கு ஆபிரிக்காவில் உருப்பெற்று பெரிய மூளையும், கூர்மையான கண்களும், திறமையான கைகால்களும் கொண்டு பல்வேறு பெயர்களில் இடம் பெயர்ந்துள்ளது. 2 இலட்சம் வருடங்களுக்கு முன்பு நவீன, புத்தியுள்ள மனித இனம் ஏற்பட்டது. இதன்பின்பு தோன்றின நாகரிகங்களுக்கும், மதங்களுக்கும் அளவில்லை. மனிதனும் உயிர்களும் தோன்றியது மிகப்பெரிய இரகசியம் தான். இன்னும் இப்புதிருக்கு தீர்ப்பு இல்லை.

இன்று நிகழ்வதெல்லாம் ஒரு பூகோளப்புரட்சியாகும். விஞ்ஞானம் வளர்ந்த தென்ற நிலையில் மகிழ்வு கொண்ட மனிதன் இன்று பல்வேறு அழிவுகள் பற்றி சிந்திக்க தலைப்பட்டு விட்டார். ஐன்ஸ்டீன் சிந்தித்த விஞ்ஞான முடிவுகள் கூட முழுமை பெறவில்லை. கடவுளே உலகைப் படைத்தார். உயிர்களையும்படைத்தார் என்பது ஒரு சிறப்பு கொள்கை, தாமாகவே உலகமும் உயிர்களும் திடீரென தோன்றியது என்பது தான்தோன்றிக் கொள்கை. பூகோள பரிமாணக் கொள்கை என்பது விண்வீழ் கற்களால் உலகம் உண்டானது என்பது ஆகும். உடற் செயலியல் வேதியியல் கொள்கை என்பது புவியிலுள்ள இரசாயன கலப்புகளால் உயிர் தோன்றியது என்பது ஆகும். எல்லாமே தொடர்கதை தான்.


யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED

நகைச்சுவைத் தொடர் 293

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்




BBQ பாட்டி எனக்கு நல்ல விருப்பம். 'பட் ஐ மீன் சிமோக் எனக்கு அலேர்ஜிக் என்றவாறு நடந்தா..
ஆனால் பார்க்கினுள் சென்றதும் அவரது லேடீஸ் அசோசியேசன் ஏரியா 5 க்கு கிட்டப் போனாலும் ஒரு புகையோ மணமோ வரவில்லை. பார்க்குகளில் நெருப்பு எரிப்பது, புகைப்பது தவிர்க்கப்பட்டுள்ளது. வீடுகளிலும் ரேக் அவுட்டிலும் செய்த சாப்பாடுகள் தான்.
உலகர் மனதில் மறந்தவர்களையும் மறக்காமல் மனதில் இருப்பவர்களையும் கண்டு கை காட்டிக்கொண்டே சென்றார்.





செக்கண்ட் புளோர் செல்லம்மா, ஆட்டிலறி அன்னம்மா மனதுக்குள் சிரித்துக்கொண்டனர். வெந்தது பாதி வேகாதது பாதி சமாளித்துக்கொண்டு BBQ பாட்டி நல்லதோ கெட்டதோ ஐ பொட் அகிலாண்டேஸ்வரி அகப்பட்ட ஆங்கிளிலெல்லாம் படம் எடுத்துக் கொண்டா. இப்பொழுதெல்லாம் விழாக்கள் சிறிதோ பெரிதோ பேஸ்புக் மூலம் பிரபலமாக்கி விடலாம். அதுதான் இன்றைய ஸ்ரைல்.



இதற்கும் மேலாக ஐ பொட் அகிலாண்டேஸ்வரி தனது ஐ பாட்டால் இஸ்ரேல் குண்டுவீச்சை பத்திரிகை நிருபர்கள் படம் எடுப்பது போல மாறி மாறி எடுத்துக்கொண்டார்.

ஐ பொட் அகிலா இடையிடை பேஸ் புக்கில் அப்லோட் பண்ணிக்கொண்டா.
இடையிடை குளத்தில் கல் எறிந்ததுபோல் க்ளுக் க்ளுக் என சத்தம் கேட்டது.
சர்வதேச ரீதியில் ஐ பொட் அகிலாண்டேஸ்வரியின் நண்பர்கள் லைக் பண்ணிக்கொண்டிருந்தனர்.

தனக்கு படிப்பித்த தமிழ் ரீச்சர் ஜேர்மனியில் இறந்த செய்திக்கு லைக் போட்டுக்கொண்டிருந்தா. மரணச்செய்திக்கே லைக் போடும் விந்தை உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.



உலகநாடுகளில் அங்கிங்கெண்ணாதபடி செல் தாக்குதல், றொக்கற் தாக்குதல், வானெல்லாம் புகை மண்டலம்..
ஒரு கோழி வாட்ட வழியில்லை என வாடிப்போன முகத்துடன் முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



உண்மைதான், இஸ்ரேல் தாக்குதலின் பிரதிபலிப்பு இந்தியாவில் கலாட்டா, கலவரம், தீ வைப்பு... பாகிஸ்தான் ஈரான் ஈராக் சிரியா உக்கிரேன் நாடுகளில் இரவு பகலின்றி உயிர்க்கொலை, அழுகை ஓலம், கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் பிடரியில் துப்பாக்கி சூடு... இத்தனைக்கும் சமயம் மையப்படுத்தப்படுகிறது. போருக்கு ஒரு காரணம் தேவை. இவையெல்லாம் அக்கிரமம் அடாவடித்தனமென்று இலங்கை அரசு கூட கண்டனம் தெரிவித்துள்ளது.
(உன்னையே நீ எண்ணிப்பார்! சோக்கிரடீஸ் நாடகத்தில் கேட்ட வசனம்)

இதற்கிடையில் வழமைபோல விடுமுறைக்கு இந்தியா சென்ற தாமோதரம் அங்கிருந்து ஒவ்வொரு மணி நேரமும் இரவு பகலின்றி படங்களை, செய்திகளை உலகருக்கு காட்டும்படி ஐ பொட் அகிலாவுக்கு அனுப்பிக்கொண்டேயிருந்தான்.
தமன்னா தடக்கி விழுந்தார். அனுஸ்கா வீட்டு ஆடு, ஆட்டுக்குட்டி போட்டது.
கோச்சடையான் பட விழாவிற்கு காளிக்கு கோழி என்ற அப்படி இப்படி செய்திகளும் கலந்து வந்தன.




அத்துடன் வீதிகளில் பெயின்ற் அடிக்காத வீட்டுச் சுவர்களிலெல்லாம் இலங்கை அரசைக் கண்டித்து 12 அடி நீள, 12 அடி அகல போஸ்ரர்கள்.
கற்சிலைகளுக்கு பாலூற்றி வீணாக்குகிறார்கள் என்று பேசுபவர்களே பால் மாடுகள் உண்ணும் வைக்கலில் கொடும்பாவி செய்து கொழுத்துகிறார்கள்.
(இதனை மூடநம்பிக்கை என்று யாரும் சொல்லக்கூடாது)



ஈபோலோ நோய் தாக்குதல் ஆபிரிக்காவில் அதிவேக நோய்க் கொல்லியாகியுள்ளது. 1000 க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஆகஸ்ட் 15 - 31




16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம்.
ஆகஸ்ற் 16 (பெப்ரவரி 18.1836 - ஆகஸ்ட் 16.1886)
சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார்.
அனைத்த மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.



16. பாடகி ஜிக்கி நினைவு தினம்

18. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம் (1945)




19. உலக புகைப்படநாள்

22. ஜாக் லேரன் நினைவு நாள் (July 18, 1950 - August 22, 2011)



22. டி.எஸ் பாலையா பிறந்த தினம்.
(ஆகஸ்ற் 22.1941 - டிசம்பர் 21. 1972) ஆரம்பகாலத்தில் வில்லனாக நடித்தவர். பின்னர் நகைச்சுவைப்பாத்திரத்தில் முத்திரை பதித்தவர். காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள் திருவிளையாடல் பாலையாவை மறக்க முடியுமா?



25. அருள்மொழி அரசு, திருப்புகழ் ஜோதி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்த தினம்.
(ஆகஸ்ற் 25. 1906 - நவம்பர் 7.1993)


29. விநாயக சதுர்த்தி



31. இளவரசி டயானா நினைவு நாள் (1997)

1. செப்ரெம்பர் Labour day Holiday

# கனடா வாழ்க்கை



பிட்டு என்னடா தோசை என்னடா
வேலைக்குப் போகும் அவசரத்தில்
அம்மா கடையிலும் பாபு கடையிலும்
வாங்கி ஓடுறார் சோத்துப் பார்சலை.

கோப்பி வைக்கவே நேரம் இன்றியே
தேடி ஓடுறார் கோப்பிக் கடைகளை
குழந்தை குட்டியை மேய்த்து கட்டவே
குட்டிக் கரணம்தான் போடுறார்.

தாயும் தந்தையும் இரவும் பகலுமாய்
ஓடி உழைக்கிறார் பாரடா ---- இவர்
பெற்ற பிள்ளைகள் இரவும் பகலுமாய்
என்ன பார்க்கிறார் நெற்றில் என்று கேளடா?

செல்வம் சேர்க்கவே இங்கு வந்ததாய்
கூறித் திரிகிறார் பாரடா --- இவர்
சேர்த்த செல்வங்கள் எவையென்று கேட்டால்
நீரிழிவும் இரத்தஅழுத்தமும் இதயநோயும் என்கிறார்.

பார்த்து பார்த்து வாங்கிய வீட்டிலும்
தடவி தடவி வாங்கிய சோபா கட்டிலிலும்
இருக்க படுக்க நேரமின்றியே ஓடுறார் --- இவர்
பட்ட பாட்டுக்கு இவை தேவையா என்று கேளடா?.

பெற்றதாயை பெரும் பாசம் காட்டியே
கூட்டி வருகிறார் பாரடா --- இவர்கள்
பெற்ற பிள்ளையை பார்த்து முடித்ததும்
கொண்டே தள்ளுறார் முதியோர் இல்லத்தில் ஏனடா?

பார்ட்டி என்றதும் பத்துமைல் என்றாலும்
பரிபோல பாய்ந்து செல்லும் இவர்கள்
பக்கத்தில் இருக்கும் கோயிலுக்கோ முதியோர் சங்கத்துக்கோ
போகக் கேட்டால் முகம்சுழித்து முறைப்பதும் ஏனடா?

குரக்கன் பிட்டுக்கும் குறிஞ்சா இலைக்கும்
நம்மவர் கடைநாடி நாயாய் அலைகின்றார்
ஆலயச் சோற்றுக்கும் ஆலாய் பறக்கிறார் ஏனடா? ----- இவர்
அறுசுவை உணவுகண்டு எத்தனை நாளடா?.

வீட்டில் தமிழ்பேச விரும்பாத இவர்கள்
பிள்ளைக்கு தமிழ் கற்றுத்தர வெட்கப்பட்டவர்கள்
தமக்குள் சண்டை வந்தால் மட்டும்
தமிழில் கத்துப்படுவது ஏனடா?.

ஆறறை வீட்டையும் ஆடம்பரக் காரையும்
மோட்கேஜில் வாங்கி முழிபிதுங்கும் இவர்கள்
முழுக்கடனும் கட்டி மூச்சு விடுவதற்குள்
முக்கால்வாசி வாழ்க்கை முடிந்துவிடும் இவர்வாழ்வில்.



- மார்க்கம் சந்திரன் -

# GAS STATIONS/BUSINESSES FOR SALE

**Colombia Way/ Hwy 50**
PRICE REDUCED
Sale Of Business Without Property Gas Stations $199,000
Golden Opportunity To Own Operate Family Gas Bar In Gta

**Peterborough**
PRICE REDUCED
Sale Of Business With Property Convenience/Variety $375,000
Excellent Location, Rare Opportunity To Own & Operate A Well Established (35 Yrs) Branded C Store, "Daisy Mart".

**Minden Hills**
AMCO PETROLEUM — PRICE REDUCED
Sale Of Business With Property Gas Stations $459,000
with 7 Acre Land &2-1BR Apt
Well Established Enroute Stop Over On Busy Hwy 503

**GTA**
CAR WASH
3 Bay Coin Car Wash with 2 vacuum & Vending Machine
Asking only $259,000
Lease 10+10 . Rent $4000+TMI/ Month

**Waterloo Beverly/Wellingto**
SOLD
Sale Of Business With Property Gas Stations $1.3M Plus Stock
Busy Corner Location Next To City Hall Surrounded By Appts&Houses. Lots Of Walk In Loyal Customer

**Kingston Division St /Benson St**
SOLD
Sale Of Business With Property Gas Stations $1.8M Plus Stock
Well Established And Maintained Busy Shell Gas Station In Fast Growing Kingston City

**Brantford King George Rd/HWY 403**
Sale Of Business With Property Gas Stations $1.9M Plus Stock
Excellent Opportunity To Own A # 1 Branded Esso Otr Gas Station In Urban Town

**Taviscott ESSO Oxford County**
Gas Station, Plaza & 2 storey house $2.5M Plus Stock
Totally Renovated and Just an Hour from GTA

**Toronto Dundas / Windermere**
Sale Of Business With Property Gas Station & More $6.5M Plus Stock
CANGO Gas Station, Leased for 30,000/Month

**Peterborough Park Rd / Monaghan**
Gas Station and Plaza with Property $1,5M Plus Stock
well maintained and managed

**GTA Square Beauty Salon With Property**
$369,00 Plus Stock
Well Established Beauty, Spa & Salon In A Busy High Traffic Indoor Mall



## Nel Ketha
Sales Representative
**416.677.4707**

Smart Real Estate Solutions

HomeLife GTA Realty Inc. Brokerage
Tel: 416.321.6969, Fax: 416.321.6963
www. homelifegtarealty.com
203-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

CCIM Individual Member

---

# வாகன விபத்து MOTOR VEHICLE ACCIDENT
SKT PARALEGAL SERVICE

## CRIMINAL MATTERS
SUMMARY

**416.803.5296**

Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்



SK THEESAN

# TRAFFIC TICKETS

LICENSED PARALEGAL sktheesan@gmail.com

## MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY

## TRAFFIC TICKETS
DON'T MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS

## CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE



















**Free Real Estate Class** - Call: **416.321.6969**





விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

**www.vlambaram.com**

**www.tamilvanakkam.com**





